
# சாரோனின் ரோஜா

# 2000



JUBILEE

A.D. 2000

**கிறிஸ்தவ ஒன்றியம்**

**அரசினர் ஆசிரியர் கலாசாலை**


**யதன்சைட்-கொட்டகலை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாரோனின் ரோஜா

# 2000



## 12 வது மலர்

**கிறிஸ்தவ ஒன்றியம்**
**அரசினர் ஆசிரியர் கலாசலை**
**யதன்சைட், கொட்டகலை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

படைப்புகள் பல கோடி
பரமனவன் படைத்திட்டான்
இவையிருந்தும் என்ன பயன்-இன்னல்கள்
இன்று இன மத மொழிகளினால்

பாரில் இவை மாற வேண்டும்
பாசமுடன் நாம் வாழ வேண்டும்
நாட்டிலே சமாதானம் நிலைக்க வேண்டும்
நம்மில் பேதங்கள் ஒழியவேண்டும்

சண்டைகள் ஒழிந்து
சமாதானம் பெருகிடவே
சமர்ப்பிக்கின்றோம் இந்நூலை-இந்நாட்டின்
சமாதானத்திற்காய்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் பற்றிய விபரம்

| | |
|---|---|
| நூலின் பெயர்:- | சாரோனின் ரோஜா. |
| மலர்:- | 12வது மலர் |
| உரிமை:- | கிறிஸ்தவ ஒன்றியம். |
| பக்கங்கள்:- | |
| அச்சிடப்பட்ட நூல்களின் தொகை:- | 100 |
| எழுத்தின் அளவு:- | 12 புள்ளி |
| காகிதத்தாளின் அளவு:- | 70 பு அ |
| வெளியீடு:- | கிறிஸ்தவ ஒன்றியம்<br>அரசினர் ஆசிரியர் கலாசாலை,<br>யதன்சைட் கொட்டகலை. |
| அச்சுப்பதிப்பு:- | தனு பிரின்ட்<br>இல, 6. கெட்கொப் கட்டிடம்,<br>ஹட்டன். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முதலாவது வரிசை:- (இடமிருந்து வலம்) எஸ்.செல்வராஜ் (மாணவர்பேரவை செயலாளர்), வி.எலிசபெத்(பத்ராதிபர்) எஸ்.அன்சலம் (தலைவர் கிறிஸ்தவ ஒன்றியம்) திரு.சி.ஞானபிரகாசம் (ஆலோசகர், பொறுப்பு விரிவுரையாளர்) திரு.எஸ்.ஜெயக்குமார் (கல்லூரி முதல்வர்) திருமதி. சுமதி அன்பரசு (விரிவுரையாளர்) செல்வி.எம்.சந்திரலேகா (பொறுப்பு விரிவுரையாளர்) செல்வி.ஏ.பி.ஷர்மிலா (செயலாளர் கிறிஸ்தவ ஒன்றியம்) திரு.எம்.மூவேந்தன் (தலைவர் மாணவர்பேரவை).

இரண்டாம் வரிசை:- (இ,வ) செல்வி.ஜூலியட் மேரி, செல்வி.பி.ஜெ.எஸ்.கிறேஸ், செல்வி.ஏ.சகாயமேரி (உபசெயலாளர் கி.ஒ) செல்வி.எம்.ஏ.மேரி, திருமதி.எஸ்.நிரஞ்சனி, திருமதி.எஸ்.கிறிஸ்டலா, செல்வி.எம்.மரியநாயகி, திருமதி.ஆர்.எம்.வி.குரூஸ்., செல்வி.ஏ.சூசலி, செல்வி.எஸ்.ரமணி(பொருளாளர் கி.ஒ) செல்வி.எல்.எக்னஸ்மேரி, திருமதி.எம்.ஜே.ராஜினி, செல்வி.எஸ்.வியானிரோஸ், செல்வி.பி.சுசிலா, திருமதி.ஜே.டி.கெங்கேஸ்வரி, செல்வி.ஜே.எட்னா.

மூன்றாம் வரிசை:- (இ.வ) ஏ.ஆர்தாஸகுமாரன், திரு.ஜே.எஸ்.சூசை, திரு.எல்.ஜோசப்(உபதலைவர் கி.ஒ) திரு.ஜே.என்டனி, திரு.இ.குருஸ், திரு.பி.சேகர்ஸ்நாதன், திரு.பிரான்சிஸ், திரு.ராஜபதி, திரு.ஜே.ஜீட் என்டனி, திரு.செபமாலை, திரு.செ.யதீஸ்குமார், திரு.தவநாதன், திரு.அமிர்தநாதன்.

சமூகமளிக்காதோர்:- திரு.ஆர்.பிலிசியன், திரு.எஸ்.போல்ராஜ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது வரிசை:- (இடமிருந்து வலம்) எஸ்.செல்வராஜ் (மாணவர்பேரவை செயலாளர்), வி.எலிசபெத்(பத்த்ராதிபர்) எஸ்.அன்சலம் (தலைவர் கிறிஸ்தவ ஒன்றியம்) திரு.சி.ஞானபிரகாசம் (ஆலோசகர், பொறுப்பு விரிவுரையாளர்) திரு.எஸ்.ஜெயக்குமார் (கல்லூரி முதல்வர்) திருமதி. சுமதி அன்பரசு (விரிவுரையாளர்) செல்வி.எம்.சந்திரலேகா (பொறுப்பு விரிவுரையாளர்) செல்வி.ஏ.பி.ஷர்மிலா (செயலாளர் கிறிஸ்தவ ஒன்றியம்) திரு.எம்.மூவேந்தன் (தலைவர் மாணவர்பேரவை).

இரண்டாம் வரிசை:- (இ.வ) செல்வி.ஜுலியட் மேரி, செல்வி.பி.ஜெ.எஸ்.கிறேஸ், செல்வி.ஏ.சகாயமேரி (உபசெயலாளர் கி.ஒ) செல்வி.எம்.ஏ.மேரி, திருமதி.எஸ்.நிரஞ்சனி, திருமதி.எஸ்.கிறிஸ்டலா, செல்வி.எம்.மரியநாயகி, திருமதி.ஆர்.எம்.வி.குரூஸ்., செல்வி.ஏ.சூசலி, செல்வி.எஸ்.ரமணி(பொருளாளர் கி.ஒ) செல்வி.எல்.எக்னஸ்மேரி, திருமதி.எம்.ஜே.ராஜினி, செல்வி.எஸ்.வியானிரோஸ், செல்வி.பி.சுசிலா, திருமதி.ஜே.டி.கெங்கேஸ்வரி, செல்வி.ஜே.எட்னா,

மூன்றாம் வரிசை:- (இ.வ) ஏ.ஆர்தாஸகுமாரன், திரு.ஜே.எஸ்.சூசை, திரு.எல்.ஜோசப்(உபதலைவர் கி.ஒ) திரு.ஜே.எண்டனி, திரு.இ.குரூஸ், திரு.பி.சேகர்ஸ்நாதன், திரு.பிரான்சிஸ், திரு.ராஜபதி, திரு.ஜே.ஜீட் எண்டனி, திரு.செபமாலை, திரு.செ.யதீஸ்குமார், திரு.தவநாதன், திரு.அமிர்தநாதன்,

சமூகமளிக்காதோர்:- திரு.ஆர்.பிலிசியன், திரு.எஸ்.போல்ராஜ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருட்தந்தையின் ஆசியுரை..



□சாரோனின் ரோஜா□ இதழ் இவ்ஜுபிலி ஆண்டிலே மீண்டும் வெளிவருவதையிட்டு மகிழ்வடைகின்றேன்.

ஜுபிலி என்பது கிறிஸ்துவின் இரண்டாயிரமாம் ஆண்டு பிறப்பு விழா மட்டுமன்று அது கிறிஸ்து நற்செய்தியாக இவ்வுலகிற்கு வந்ததன் 2000ம் ஆண்டு வருட நிறைவும் கூட. நற்செய்தி என்பது கிறிஸ்வை எமது வாழ்வில் வாழ்ந்து அதனை பிறருடன் பகிர்ந்துக்கொள்வதாகும். இதனை செவ்வனே செய்யக்கூடியவர்கள் ஆசிரியர்களே.

இவ்வனுபவங்கள் சொல்வடிவிலோ எழுத்து வடிவிலோ மட்டும் நின்று விடாமல் செயலாக்கம் பெற வாழ்த்துகின்றேன். இன்றைய உலகம், விசேடமாக எம் நாடும்கூட சுயநலதிற்கு அடிமையாகி உள்ளது. ஆசிரிய பணியும் அனேக நேரங்களில் இதற்கு விதிவிலக்கல்ல. எனவே நாளைய சமூகத்தை இத்தீமையிலிருந்து பாதுகாக்கும் சவாலும் பொறுப்பும் இன்றைய ஆசரியர்களையே சாரும். இதனை உணர்ந்து நீங்களும் செயற்பட என் வாழ்த்துக்கள், ஆசிகள்.

இறையாசீர்,

நிறையாசீர்

**அருட்பணி அல்வின் பர்னாந்து**


**பங்குத்தந்தை குழந்தை இயேசு ஆலயம்**

**பட்டல்கலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரி முதல்வரின் ஆசிச் செய்தி....



ஆண்டு தோறும் இக்கல்லூரியில் மலரும் சாரோனின் ரோஜா எனும் நூலுக்கு ஆசியுரை வழங்குவதில் பெருமையடைகின்றேன். பார்ப்பதற்கு பல்வேறு நிறங்களைக் கொண்டு காட்சியளிக்கும் ரோஜாக்களில் ஆண்டுதோறும் கல்லூரியில் மலரும் இச்சாரோனின் ரோஜா பார்ப்பதற்கு மட்டுமன்றி மனித வாழ்க்கைக்குமே வழிகாட்டுகின்றது. என்பது முக்கிய அம்சமாகும். இச்சாரோனின் ரோஜாவானது தூய்மை, பரிசுத்தம், சமத்துவம், சகோதரத்துவம், மனிதனேயம், ஆன்மீகம் என்பவற்றை இவ்வாசிரிய மாணவர்களினது மனதில் பரப்பி விடுவதுமட்டுமன்றி வெளியுலகிலும் ஏற்படுத்திவருகின்றது என்பது கண்கூடு.

இக்கல்லூரியில் கிறிஸ்தவ ஆசிரிய மாணவர்கள் சிறு தொகையினராக இருந்தபோதிலும் பெருந்தொகையான இந்து மாணவர்களுடன் சினேக பூர்வமாக நடந்து கொள்வதும் மதம் என்ற வேறுபாட்டை மறந்து ஒரே குழுவாக இயங்குவதும் சகலரினதும் ஒத்துழைப்பினை பெற்று தொடர்ந்தும் ஒளிவிழாவினையும் சாரோனின் ரோஜாவையும் வெற்றிகரமாக வெளியிட்டு வருவதும் ஒரு முன்மாதிரியான செயற்பாடாகும்.

மனித நேயம் மறைந்து வன்செயல் கலாசாரம் வளர்ந்து வரும் இக்காலகட்டத்தில் சமூக விழுமியங்களுக்கு ஏற்ப வழிகாட்டுவது அவசியமாகும். அப்பணியினை வெறுமனே இந்நூலை வெளியிடுவதில் மட்டும் செய்து விட முடியாது. அதற்கு மேலாக நடைமுறைக்கு சாதகமான இன்னும் பல அம்சங்களிலும் இம்மன்றம் ஈடுபட வேண்டுமென எதிர்பார்க்கின்றேன்.

**எஸ். ஜெயக்குமார்.**
**கல்லூரி முதல்வர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரி முதல்வரின்
# ஆசிச் செய்தி.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவ ஒன்றியம்- 2000

காப்பாளர்கள்:- திரு.எஸ்.ஜெயக்குமார் (முதல்வர்)
திரு.ப.ஸ்ரீதரன். (உபமுதல்வர்)

பொறுப்பு விரிவுரையாளர்கள்:-
திரு.சி.ஞானப்பிரகாசம்
செல்வி.எம்.சந்திரலேகா

தலைவர்:- திரு.எஸ்.அன்சலம்.

உபதலைவர்:- திரு.எஸ்.ஜோசப்.

செயலாளர்:- செல்வி.ஏ.பி.சர்மிலா

உபசெயலாளர்:-செல்வி.ஏ.சகாயமேரி

பொருளாளர்:- செல்வி.ரமணி சிவன்.

பத்திராதிபர்:- திருமதி.வி.எலிசபெத்

## உறுப்பினர்கள்:—

திரு. பி.சேகர்ஸ்நாதன்.
திரு. ஜூட் என்டனி
திரு. எஸ்.பிரான்சிஸ்.
திரு. எம்.ஆர்.பிலீசியன்.
திரு. ஏ.ஆர்.தாசகுமாரன்.
திரு. எஸ்.செபமாலை.
திரு. ஏ.தவநாதன்.
திரு. எஸ்.யதீஸ்குமார்.
திரு. எஸ்.போல்ராஜ்.
திரு. ராஜபதி.
திரு. எஸ்.ரெவல்.
திரு. ஏ.அமிர்தநாதன்.
திரு. இக்னேசியஸ் குரூஸ்
திரு. என்டனீஸ்

திருமதி. எம்.ஜே.ராஜினி.
திருமதி. ஜே.டி.கெங்கேஸ்வரி
செல்வி. எஸ்.வியானிரோஸ்.
செல்வி. எல்.எக்னஸ் மேரி.
செல்வி. ஏ.சூசலி.
செல்வி. பி.சுசிலா.
செல்வி. வை.ஜூலியட்மேரி
செல்வி. எம்.மரியநாயகி.
செல்வி. எம்.ஏ.மேரி.
செல்வி. ஜொசபின் எட்னா.
செல்வி. ஆர்.அன்னமேரி.
செல்வி. ஜூலிகிரேஸ்.
திருமதி. ரொசிட்டா.
திருமதி. எஸ். கிரிஸ்டலா
திருமதி. எஸ்.நிரஞ்சனி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உபஅதிபரின் உள்ளத்திலிருந்து.

*என்றும் அன்புடன் உங்களுக்கு,*



மிலேனியத்தை கடந்து 21ம் நூற்றாண்டில் காலடி எடுத்து வைக்க உள்ளோம். சாரோனின் ரோஜா மிலேனிய வருடத்தில் வெளிவருவதை கண்டு மனமகிழ்கிறேன்.

சமுதாயத்தில் வளர்ந்த நற்பிரஜைகளில் ஆசிரியர்கள் மிகவும் முக்கியமான பங்கினை வகிக்கிறார்கள். நவீன உலகத்திற்கு பொருத்தமான பங்களிப்பினை செய்வார்கள் என்ற எதிர்பார்ப்பு அனைவரிடத்திலும் இருக்கும் அசையாத ஒரு நம்பிக்கை. அதனை செயலில் காட்டவேண்டிய பாரிய பொறுப்பு உங்களைச் சார்ந்தது.

"இயேசுவின் பெயரால் ஏழைகளுக்கும் வறியவர்களுக்கும் ஊனமுற்றவர்களுக்கும் யார் ஊழியம் செய்கின்றார்களோ அங்கு இயேசு இருப்பார்" என்று பைபில் கூறுகின்றது. உண்மையாக இயேசுவின் விசுவாசிகளாக நீங்கள் இருப்பின் உங்கள் தொழில், செயற்பாட்டில் இதன் மகத்துவத்தை காட்டுங்கள் இயேசுவின் பெயரால் ஊழியம் செய்யுங்கள்.

உங்களின் அன்பு கருணை எனும் கவனமிக்க கண்களைக்கொண்டு குரோதம், வெறுப்பு, பொறாமை ஆகியவற்றிலிருந்து விடுபடுங்கள். ஒற்றுமையெனும் ஒளி உலகம் முழுவதையும் சூழ வழியமைத்துக்கொடுங்கள்.

"சாரோனின் ரோஜா" வெளிவருவதற்கு முன்நின்று உழைத்த பொறுப்பு விரிவுரையாளர், தலைவர், செயலாளர், பொருளாளர், பத்திராதிபர், உறுப்பினர்கள் அனைவரினதும் சேவையையும் பொறுப்புணர்வையும் பாராட்டுகின்றேன்.

வாழ்த்துக்கள்.

ஒளிவிழா, நூல் வெளியீடு சிறப்புற நல்லாசிகள்.
Wish Your Happy Millennium Chistmas

**பழனிமுத்து ஸ்ரீதரன்**
**கல்லூரி உப முதல்வர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலோசகரின் ஆசிச்செய்தி



மிலேனிய வருடத்தில் மீண்டுமொரு "சாரோனின் ரோஜா" வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். திருச்சபையானது இவ்வருடத்தின் கருப்பொருளாக "கிறிஸ்துவே எம்மை குணப்படுத்தி ஒற்றுமையாக்கி சமாதானம் தந்தருளும்", எனக்கொண்டுள்ளது. இக்கருப்பொருளை அடைவதற்கு தொடர்பாடல் முக்கியமாக கருதப்படுகின்றது.

ஒரு சமூகத்தில் ஒன்றிணைந்து வாழ்வதும் ஒரு வகையான தொடர்பாடலே. இத்தொடர்பாடலின்போது எமது வாழ்க்கை முக்கிய தொடர்பாடல் ஊடகமாக காணப்படுகிறது. தொடர்பாடலின் போது செய்தியைக் கருதுகிறோம். ஆனால் இங்கு நபரை கருதுகிறோம். இந்த நபரும் தனியாக தொடர்பு கொள்வது சிரமமானது இறைவனை தொடர்பு படுத்தினால் அவர்போல் வாழ வேண்டும். அன்பை தொடர்பு படுத்தினால் அன்பு செலுத்த வேண்டும்.

இறைவன் மனிதனை தனது சாயலாகப் படைத்தார். மனிதன் தனிமையில் வாழ முடியாது இன்னுமொருவருடன் இணைந்து வாழும்போது இயற்கையாக அவன் தொடர்பாடலில் ஈடுபடுகின்றான். இறைவன் மனிதனோடும், மனிதன் மனிதனோடும் தொடர்பு கொள்கின்றான். மேலும் மனிதன் இறைவார்த்தைகளோடு தொடர்பு கொள்கின்றான். இதன் மூலம் மீண்டும் மனிதன் இறைவனோடு தொடர்பு கொள்கின்றான். இத்தொடர்பாடல் மீட்பின் வரலாறு எனக்கொள்ளப்படுகின்றது. இறை வெளிப்பாட்டை தொடர்பாடலாக கொண்டால் அது மனித விடுதலைக்காக இடம் பெற்றதை காணலாம். அப்படியானால் தொடர்பாடலில் பிரதானமான தொழில் நுட்பம் கருவியல்ல. ஆனால் நபர் தொடர்பாடலுக்கு நல்ல குரல், நடிப்பு, தொனி முக்கியமல்ல. அன்னை திரேசா, இறைவன் யார்? என்பதை வாழ்க்கை தொடர்பாடலில் ஈடுபட்டு எடுத்துக்காட்டினார். இவ்வாறு நோக்கும்போது சிறந்த தொடர்பாடல் ஊடகம் நாமே. அந்த வகையில் எமது கலாசாலையின் கிறிஸ்தவ மன்றத்தினர் இறைவனோடு தொடர்பாடல் செய்ய மற்றவர்களுக்கு இறைவனை அறிமுகப்படுத்த அவர்களோடு ஒன்றிணைய முயன்ற மீண்டுமொரு பிரியத்தனமே இந்த "மிலேனிய சாரோனின் ரோஜா". இம் மலர் வெளிவர உழைத்த அனைவருக்கும் எனது நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவிக்கின்றேன்.

எம்மையெல்லாம் ஒன்றினைக்கும் இறைவனை இம்மலர் மூலம் ஓரளவாவது அறிந்து கொள்ளவும் இறைவன் எம்மையும் குணப்படுத்தி ஒற்றுமையாக்கி சமாதானம் தந்தருள தொடர்பாடலில் ஈடுபடுவோம்.

**அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பின் இரண்டாயிரமாம் ஆண்டு வாழ்த்துக்கள்.**

**சி.ஞானப்பிரகாசம்**

**ஆலோசகரும் மன்றப் பொறுப்பு விரிவுரையாளரும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்பு விரிவுரையாளரின் வாழ்த்துரை...



வருடாவருடம் எமது கல்லூரியின் கிறிஸ்தவமாணவர்களால் வெளியிடப்படும் "சாரோனின் ரோஜா" மலர் இம்முறையும் நேர்த்தியாக வெளிவந்திருப்பதைக்கண்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

மனிதன் மாண்புள்ளவனாக வாழ்வதற்கு மதம் துணைபுரிகின்றது. உலகம் எதையும் கடந்துப்போய்க்கொண்டிருக்கலாம் ஆனால் மனிதன் என்னவோ தெய்வீக நம்பிக்கையின் அடிப்படையோடுதான் தன் வாழ்வை நகர்த்திக் கொண்டிருக்கின்றான். அந்த வகையில் கிறிஸ்தவ மதத்தத்துவங்களும் நம்பிக்கைகளும் மனிதனை நல் வழிபடுத்துவனவாகவே காணப்படுகின்றன. அன்பு, பணிவு, மன்னிப்பு, சமாதானம், சகோதரத்துவம் என்பன மனிதனை மேன்மையடையச் செய்யும் கிறிஸ்தவ மதக்கொள்கைகளாக விளங்குகின்றன. இவற்றினூடாக சமாதானத்தை எதிர்பார்த்தும் கிறிஸ்துவையும் சுவிசேஷத்தையும் அறியச்செய்யும் வகையிலும் சாரோனின் ரோஜாவின் சகல ஆக்கங்களும் அமைந்துள்ளன. அவைகளைப் படைத்தவர்கள் ஆக்கதிறனூடாக தம்முடைய ஆன்மீக பணியை பகிர்ந்துகொண்டுள்ளனர். தொடர்ந்து இவர்களின் இறைப்பணி தூய இறைவனின் அன்பு வழியாக இருக்வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

"ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்" (கலா6:2)

**செல்வி. எம். சந்திரலேகா.**

**(விரிவுரையாளர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவப்பேரவைத் தலைவரின் வாழ்த்துரை



"சமயத்திற்கு தொண்டு செய்பவன் இறைவனால் அருளபப்டுகின்றான்" எங்கள் கலாசாலையின் கிறிஸ்தவ மன்றம் இவ்வாண்டும் மிக்க சிறப்பாக சாரோனின் ரோஜா மலரை வெளியிடுவதை எண்ணி பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். எங்கள் கலாசாலையின் மிக்குயர் மரபிலான ஆசிரியத்துவத்தின் உண்மையான வெளிப்பாடாக இந்நூல் திகழ்கின்றது. மிக குறைந்தளவான கிறிஸ்தவ சகோதரர்கள் இருப்பினும் எல்லா சமய சகோதரர்களினதும் பங்களிப்பு இங்கு வியந்து போற்றத்தக்கதாகும்.

இன்றைய தலைமுறையினர் ஒவ்வொருவரும் தமது சமய உண்மைகள் குறித்து ஆழ்ந்து சிந்திக்கவும், சமயத்திலே நாட்டம் கொள்ளவும் இந்நூல் தூண்டுகோலாக அமையும் என்ற நம்பிக்கையை வளர்க்கும் அளவிளான ஆக்கங்களை இந்நூல்கொண்டுள்ளமை பாராட்டுக்குரியதாகும்.

"வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர் தம்
உள்ளத்து அணையது உயர்வு" (உலக பொதுமறை-திருக்குறள்) தண்ணீரின் அனைவுக்கு தக்கபடி மலர்த்தண்டின் நீளம் அமையும் அது போல மக்கள் ஊக்கத்திற்கு தக்கபடி உயர்வு கிடைக்கும். என்பதற்கு எமது கலாசாலையின் கிறிஸ்தவ மன்ற செயற்பாடுகள் எடுத்துக்காட்டாக அமைகின்றன.

இந்நூல் மட்டுமல்லாமல் ஒளிவிழாவும் சிறப்பாக நடைபெற வழிகாட்டிய கிறிஸ்தவ மன்ற பொறுப்பு விரிவுரையாளர்கள் தங்கள் பணியை சிரம் மேற்கொண்டு துடிப்புடன் செயற்பட்ட தலைவர், செயலாளர், பொருளாளர், பத்திராதிபர், உறுப்பினர்களின் பணிமிகவும் பாராட்டப் படவேண்டியதாகும். இந்நூல் மனித நேய ஒருமைப்பாடுதனை வளர்க்க ஆலவிருட்சமாய் பயன்படவேண்டுமென இதயபூர்வமாக வாழ்த்துகிறேன்.

**மூக்குப்பிள்ளை மூவேந்தன்**
**மாணவர்பேரவை**
**தலைவர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவப்பேரவைச் செயலாளரின்

## வாழ்த்துரை...



மார்கழித் திங்களாம் மனுக்குமாரன் மண்ணின் மைந்தனாய் அவதரித்ததை நினைவுகூறும் வேளையில் அவரின் பெயரிலேயே சாரோனின் ரோஜாவாக இக்கல்லூரியின் கிறிஸ்தவ ஒன்றியத்தினால் இம்மலர் 12வது மலராக வெளிவருவதில் உவகையடைகிறேன்.

விண்ணின் நட்சத்திரங்கள் பலவும் ஒன்றாகி எழுத்துருவாக இம்மலரில் ஒளி வீசுகின்றனவோ என எண்ணத்தூண்டும் வகையில் சகோதர சகோதரிகளின் உள்ளக்கிடைக்கைகள் பற்பல இதழ்வடிவில் இங்கு இடம்பெற்றிருப்பது சிறப்பம்சமாகும்.

தொடர்ந்து வரும் காலங்களிலும்
தொடர்ச்சியாக இம்மலர்
தோன்ற வேண்டும்
தோன்றலில் பல தேடல்கள் இடம்பெற வேண்டும்

முயற்சிக்கு தோள் கொடுத்த அனைவருக்கும் வாழ்த்துக்கூறி விடைபெறுகின்றேன்.

**எஸ். செல்வராஜா**
**மாணவப்பேரவைச் செயலாளர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைவரின் கருத்துக்கள் சில....



இறைவன்மேல் விசுவாசம், நம்பிக்கை வைப்பவன் என்றும் வீணாகான்.

**செபஸ்டியன் அன்சலம்**
**கிறிஸ்தவ ஒன்றியம்**

*இவ்வாழ்த்துரை எனது அறிமுக உரை இச்சந்தர்ப்பத்திற்கு இறைவனுக்கு நன்றி கூறி....*

மலர்ந்திருக்கின்ற மிலேனிய வருடத்தில் கொட்டகலை யதன்சைட் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் கிறிஸ்தவ ஒன்றியத்தின் ஊடாக "சாரோனின் ரோஜா" வெளிவருவதையிட்டு பெருமிதம் கொள்கின்றேன். கல்லூரியிலிருந்து வெளிவருகின்ற பல்வேறு நூல்களில் "சாரோனின் ரோஜா"வும் பிரதானமான நூலாகும். இந்நூல் காலத்தின் கோலங்களை பல வடிவங்களில் சுமந்து வருகின்றது. இன்றைய காலகட்டத்தில் நாட்டில் நடந்து வருகின்ற அட்டுளியங்கள், போர் வன்முறைகள், அழிவுகள் என்று நோக்கும் போது பெரும் வேதனைக்கு ரியவர்களாகவே நாம் வாழ்ந்து வருகின்றோம். இவ்வாறான இக்கட்டான நிலையில் பொருளாதார சிக்கல்களுக்கு மத்தியிலும் இந்நூலை வெளியிடுவதில் மகிழ்வு கொள்கின்றேன். இந்நூலை நாட்டின் சமாதானத்திற்காய் போர் வன்முறைகள் ஒழிந்து சாதிமத பேதமின்றி எல்லோரும் ஒரே குடும்பமாய் வாழ்ந்திட வேண்டி இந்நூலை சமர்ப்பணமாக் கியிருக்கின்றோம். எனவே சமாதானமும் ஒற்றுமையும் ஓங்கிடவும் நாட்டில் கல்வி முதல் பொருளாதாரம் வரை வளர்ச்சிபெற வேண்டுமெனவும் வறுமைகள் ஒழிந்து செழிப்பு பெற வாழ்த்தி விடைப் பெறுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலாளரின் சிந்தனையில் உதித்தவை...

**எனது மீட்பரும் எனது தந்தையுமாம் இறைவனது திருநாமத்தினால் ஆரம்பிக்கிறேன்.**

பாவங்களின் ஒளிப்பிற்காகவும் பாவிகளின் இரட்சிப்பிற்காகவும் உலகில் உதித்த உத்தமர் இயேசுக் கிறிஸ்து. பாவங்களின் மன்னிப்பு என்பது பாவங்களுக்கான பரிந்துரையல்ல. பாவிகளின் மீட்பாகும். உலகில் பிறந்து உலகமாந்தர்களின் உய்விற்காக தன்னை இழந்த தூய ஜீவனான கிறிஸ்து தன் இறப்பின் மூலம் விசுவாசிகளுக்கு உணர்த்துவது என்ன? உனக்காக வாழ்கின்ற சுய நல வாழ்க்கை வேண்டாம். பிறரின் உய்விற்காக தன்னை இழக்கவும் தயங்காதவனே இறப்பிலும் இறக்காது இறந்தபின்னும் உயிர்வாழக்கூடியவன். உலகை வெல்வதற்கு ஆயுதங்களும் படைகளும் தேவையில்லை. அன்பு, கருணை, ஜீவகாருண்ணியம், தியாகம் இவற்றினால் வெல்ல முடியாதது எதுவுமே இல்லை. அத்தகைய சிறப்புமிகு உயர்நிலையில் வாழ்ந்து காட்டிய இறைமகனின் திவ்ய நாமத்தை என்றும் நிலை பெறச்செய்யும் அரிய முயற்ச்சியில் "சாரோனின் ரோஜா" வருடந்தோரும் எம் கலாசாலையிலிருந்து வெளிவருகின்றது. அந்த வகையில் இவ்வாண்டும் அவ் உயரிய முயற்ச்சிக்கு எம்மை அர்ப்பணித்துக்கொண்டிருக்கின்றோம். மிலேனியத்தில் முதன் முதல் பூக்கும் இந்த ரோஜா. மென்மேலும் சிறப்பான பணியைக்கொண்டு செல்ல வேண்டும் என்பதே எமது அவா. இவ்வரிய பணிக்கு எம்மோடு துணைவந்த அனைவருக்கும் தேவ கிருபை கிட்டுவதாக தேவனுடைய திருநாமத்தை நிலைபெறச்செய்யும் அரிய பணியில் ஒரு சிறு துளியையாவது இந்நூல் செய்யுமானால் அதுவே நம்முடைய வெற்றியாகும்.

"எல்லாம் இறைவனின் மகிமைக்கே எதுவும் அயலார் நன்மைக்கே"

**ஏ.பீ.ஷர்மிலா**
**செயலாளர் கிறிஸ்தவ ஒன்றியம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாளரின் உள்ளத்திலிருந்து..

மனிதனை மனித நேயமிக்கவனாகவும் மனிதனாகவும் வாழ வைப்பதற்கு ஆன்மீகக்கல்வி அவசியமாகும். நெருக்கடிகளும் அவசரங்களும் அதிகரித்துக் காணப்படுகின்ற இந்த இயந்திர மயமான உலகத்திலே மனிதனை இயந்திர மயப்படுத்தி விடாமல் மனிதம் உயிர் வாழ்கின்ற உயிர்ப்போட்டமுள்ள ஒரு சமுதாயத்தை அவாவி நிற்கின்றது. ஆன்மீகத்துறை அந்த வகையில் சம சமய அந்தஸ்து வழங்கப்பட்டு எமது கலாசாலையில் வருடந்தோரும் வெளிவருகின்ற சாரோனின் ரோஜா நூலிற்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமையும் பெருமிதமும் அடைகின்றேன்.

இறையோனின் திவிய நாமத்தை நிலை பெறச்செய்கின்ற இவ் அரிய முயற்ச்சியானது வெற்றி பெறுவதற்கு மனம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதோடு இத்தகைய முயற்சிகள் தொடர்ந்தும் கலாசாலையில் தொடர வேண்டும்... தொடரும்... என்ற நம்பிக்கையோடு தேவனின் நாமத்தில் விடை பெறுகிறேன்.

**செல்வி. எஸ். ரமணி.**
**பொருளாளர்.**
**கிறிஸ்தவ மன்றம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதழாசிரியரின் சிந்தனையில்...



21ம் நூற்றாண்டின் கணனியுகத்திற்கு சவாலாய் அமைந்ததே சமயம். கடவுள் நம்பிக்கை அருகிவருகின்ற கால கட்டத்திலும் மக்களுக்கு ஏதாவது இறைவனைப் பற்றி கூறவேண்டுமென்ற கிறிஸ்தவ ஒன்றிய அங்கத்தவர்களின் உள்ளத்தின் வெளிப்பாடுகளே பன்னிரெண்டாவது சாரோனின் ரோஜா பிரசவம். மிலேனியத்தின் முதல் வெளியீடாக நாட்டின் சாந்தி, சமாதானம், ஒற்றுமையை நிலை நாட்டுவதற்காக கடவுளின் திருவடிகளில் இந்நூலை சமர்ப்பணம் செய்வதில் புளகாங்கிதம் அடைகின்றேன்.

மலைகளிலிருந்து பாயும் அருவியாய் சாரோனின் ரோஜா நாடெங்கும் செல்ல இருக்கின்றது. இந்நூலை அச்சிட்டு ஈழம் ஈண்டெடுத்த மக்களின் மனவெளிப்பாடுகளை எழுத்தில் வடித்தெடுத்த கவிதை, கட்டுரை, சிறுகதை என ஆங்காங்கே இருந்த ரோஜா இதழ்களை ஒன்றிணைத்து சாரோனின் ரோஜாவாய் வெளியிடுவதில் மகிழ்வடைகின்றோம். ஜுபிலி வருடத்திற்கு தேவையான ஆக்கங்களை கொண்டு இந்நூல் வெளியிடுவதற்கு நிர்வாக ரீதியாக ஒத்துழைப்பு வழங்கிய அதிபர், பொறுப்பு விரிவுரையாளர்கள், ஆக்கங்கள் கொடுத்துதவிய என் அன்பு நெஞ்சங்கள், ஆசியுரை கொடுத்த அருட்தந்தை அனைவருக்கும் நன்றி கூறி சாரோனின் ரோஜா வெளிவர உதவிய என் நாதர் இயேசுவின் ஆசிர்வாதமும் முழுமையாக கிடைத்து இந்நூல் வெளிவர ஆசிகள் பல கூறுவதில் பெருமிதம் அடைகின்றேன்.

"இந்நூலின் மகிமையும் மாட்சியும் கிறிஸ்துவின் நாமத்திற்கே உரித்தாகும்"

**இதழாசிரியர்**

**திருமதி. எலிசபெத் வில்லியம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்.

| | | |
|---|---|---|
| 1. | கிறிஸ்தவம் அனைத்து இன மதம்.:- | 01. |
| 2. | திருச்சபையும் மனித மாண்பும். | 04. |
| 3. | தூயவனாக்கும் தூய ஆவி | 06. |
| 4. | விசுவாசமுள்ள செபம் | 08. |
| 5. | அன்னை திரேசாவுக்கு வழங்கிய விருதுகள். | 10. |
| 6. | கிறிஸ்தவத்தின் தொன்மை. | 11. |
| 7. | தமிழ் விவிலிய வரலாறு. | 13. |
| 8. | கிறிஸ்து பிறப்பின் 2000ம் ஆண்டு ஜூ பிலி. | 15. |
| 9. | ஒளி பிறக்கட்டும். | 17. |
| 10. | அன்பு எங்கே? | 18. |
| 11. | மானிட மகனின் சதையும் இரத்தமும். | 20. |
| 12. | இயேசு சமாதானத்தின் தூதுவர். | 22. |
| 13. | உலகின் யுத்தமும் வேதாகமமும்-ஒரு கண்ணோட்டம். | 25. |
| 14. | புதிய சமுதாயத்தை உருவாக்க இன்றைய திருச்சபையின் பங்கு. | 28. |
| 15. | கிறிஸ்தவனும் குடும்பமும் | 30. |
| 16. | இறைவன் | 32. |
| 17. | சாரோனின் அன்னையாம் எம் கன்னித்தாய் மரியாள். | 33. |
| 18. | மகிழ்ச்சியான குடும்பம். | 48. |
| 19. | புது வாழ்வு. | 34. |
| 20. | கிறிஸ்தவ சபையின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சம்பவங்கள். | 36. |
| 21. | ஜூ பிலியின் மீட்பு | 38. |
| 22. | பேராசை. | 40. |
| 23. | கிறிஸ்தவம் என்றும் மாறுவதில்லை. | 41. |
| 24. | இயேசுவே நீ வரவேண்டும். | 42. |
| 25. | மனுஷகுமாரன். | 43. |
| 26. | ஒளி பிறந்தது. | 44. |
| 27. | அமைதியின் வழியே சமாதானம். | 45. |
| 28. | ஓடி வா தேவனே. | 46. |
| 29. | சொல் தந்த சுகம் | 47. |
| 30. | நன்றியுரை. | 50. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவம் அனைத்து இன மதம்

மனித இனம் பெரும்பாலும் தனது அடையாளத்தையும் தனித்துவத்தையும் வெளிப்படுத்த மதத்தை பிரதான கருவியாக பயன்படுத்துகின்றது. தனது கலை, கலாசாரம் உட்பட அனைத்துப் பண்பாட்டுக் கோலங்களையும் மதவாதத்தில் தங்கவைத்துள்ளது. இந்நிலையில் கிறிஸ்தவம் யாருக்கு சொந்தம்? கிறிஸ்துவின் சிலுவை மரணம் வரை யாரும் கிறிஸ்வர்கள் என்று முத்திரை குத்தப்பட்டு அடையாளங்காணப்படவில்லை "இயேசு தனது போதனைகளைக் கைக்கொண்டு அதன்படி வாழும்படி" மக்களைக்கேட்டுக்கொண்டார். கிறிஸ்தவர்கள் என்பது கிறிஸ்துவின் போதனைகளில் நடந்து தமது வாழ்க்கையில் அதனை கடைப்பிடிப்பவர்களே ஆகும்.

இயேசுவின் சீடர்களுக்கு அந்தியோக்கியா திருச்சபையிலே "கிறிஸ்தவர்கள" என்ற பெயர் முதன் முதலில் வழங்கப்பட்டது. (அப்12:26) இன்று உலகின் பெரும் பகுதி கிறிஸ்தவத்தினால் நிரப்பப்பட்டுள்ளது. இந்நிலையில் கிறிஸ்தவம் யாருக்குச் சொந்தம்? அது ஒரு அனைத்துலக மதம். அதுஒரு குறிப்பிட்ட இனத்திற்கோ, குலதிற்கோ உரிய மதமன்று. இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு கிறிஸ்துவின் பிறப்பு.

யூதரை மீட்கவரும் மெசியா ஒரு அரண்மனையிலோ மாடமாளிகையிலோ அல்லது ஒரு ஆடம்பர சூழ்நிலையிலோ பிறப்பார் என்று அன்று யூத சமூகம் எதிர்பார்த்து கொண்டிருந்தது. ஆனால் அவர் பிறந்தது ஒதுக்கப்பட்ட ஒரு மாட்டுத்தொழுவத்தில். அதே சமயம் அவரின் பிறப்பு முதலில் அறிவிக்கப்பட்டது மந்தைகளை மேய்க்கும் இடையர்களுக்கு. இதன் அடிப்படை அம்சம் யாதெனில் பிற்காலத்தில் கிறிஸ்துவின் போதனைகளின் அடிப்படையில் உருவான கிறிஸ்தவ மதம் ஒதுக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட சமூகத்துக்கும் பாவிகளுக்கும் பிணியாளிகளுக்கும் அவரின் போதனைகளின் படி நடப்பவர்களுக்கும் சொந்தமானது.

மேலும் இதற்கான ஆதாரங்களை வேதாகமத்தின் புதிய ஏற்பாட்டிற்கூடாக பார்க்கின்ற பொழுது இயேசு தனது சொந்த வாழ்வில் பல தடவைகள் நிருபித்துள்ளார். மக்களால் வெறுக்கப்பட்ட ஆயக்காரன், ஆயக்கார தலைவன் சக்கேயுவின் வீட்டில் அவர் உணவு உட்கொண்ட பொழுது அதைப்பார்த்து மக்கள் "பாவியான மனிதருடன் இவர் கலந்துக்கொள்கிறாரே" என முணுமுறுத்தனர். ஆனால் அன்றைய தினம் பாவியான சக்கேயு இரட்சிக்கப்பட்டான். அத்துடன் தனது பாவங்களை உணர்ந்து புதிய வாழ்க்கைக்குள் தன்னை ஒப்புக்கொடுத்தான். (லூக்19:5-9) மேலும் இயேசு ஆயக்காரர்களோடும் பாவிகளோடும் உட்கார்ந்து உணவு உட்கொண்ட பொழுது அதைக் கண்ட பரிசேயர் "இவர் எப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களோடு அமர்ந்து சாப்பிடலாம்" என்று விவாதித்த பொழுது இயேசு பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை, நீதிமான்களே அல்ல பாவிகளை மனந்திருப்புவதற்கே அழைக்க வந்தேன்" என்று தெரிவிக்கின்றார். (மத் 9:10-13) இன்னுமொரு சந்தர்ப்பத்தில் இயேசு இவ்வாறு கூறுகின்றார். "நானே நல்ல நானே நல்ல மேய்ப்பன் இந்த தொழுவத்தில் உள்ளவைகள் அல்லாமல் வேறு ஆடுகளும் எனக்கு உண்டு. அவைகளையும் நான் கொண்டு வர வேண்டும். (யோவான்10:14-16) இங்கு "வேறு ஆடுகள" என்பதன் அர்த்தம் யூத இனத்தை சாராத புற ஜாதியார் என்பதாகும்.

இயேசு உயிர்தெழுந்த பின் சீடர்களுக்கு தரிசனமாகி கூறுகின்றார். "சகல ஜாதிகளையும் சீடராக்குங்கள்" இந்த வார்த்தைக்கு அர்த்தம் கொடுக்கும் சம்பவமாக யேசுவின் உயிர்தெழுதலின் பின் பெந்தகோஸ்தே என்னும் பண்டிகை நாளன்று சீடர்கள் எல்லாரும் ஒரு மனப்பட்டு பரிசுத்த ஆவியின் வருகைக்காக ஒரு வீட்டின் மேல் மாடியில் ஜெபத்துடன் கூடியிருந்தார்கள். பெந்தகோஸ்தே விழாவின் பொழுது உலகின் பல பாகங்களிலிருந்தும் பல்வேறு மொழிகளை பேசுகின்ற மக்கள் ஜெருசலேமில் கூடுவார்கள். இச்சந்தர்ப்பத்தில் மேல் மாடியில் தங்கியிருந்த சீடர்கள் மேல் பரிசுத்த ஆவியானவர் அக்கினி வடிவில் இறங்குகின்றார். அதன் பின் சீடர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு மொழிகளில் பேசத்தொடங்குகின்றனர். அதைப்பார்த்து அங்கு கூடியிருந்த பல மொழிகளுக்குரியவர்களும் சீடர்கள் தங்கள் மொழிகளில் பேசுவதைக்கேட்டு அதிர்ச்சியும் ஆச்சிரியமும் அடைகின்றனர். (அப் 2:1-12) அன்றைய தினம் சுமார் 3000 மக்கள் யேசுவை ஏற்றுக்கொண்டார்கள். (அப் 2:41) இதன் படி பார்க்கின்ற பொழுது கிறிஸ்தவம் அனைத்துலக மதம் என்பது புலனாகின்றது.

இக்கூற்றுக்கு மேலும் வலு சேர்கும் வகையில் பேதுருவின் (இராயப்பர்) வாழ்வில் ஒரு சம்பவம் நிகழ்கின்றது. அவர் யோப்பா பட்டணத்தின் ஒரு வீட்டில் ஜெபம் பண்ணிக்கொண்டிருக்கும் பொழுது ஒரு தரிசனத்தைக் காண்கின்றார். வானத்திலிருந்து ஒரு பெரிய கூடு வருவதையும் அக்கூட்டில் பூமியின் சகல விலங்குகளும் இருக்கின்றன. அத்துடன் ஒரு சத்தம் கேட்கின்றது. "பேதுருவே, எழுந்திரு அடித்து புசி"அதற்கு பேதுரு கூறுகிறார். "அப்படியே ஆண்டவரே தீட்டும் அசுத்தமும் உள்ள எதையும் நான் ஒருக்காலும் புசிப்பதில்லை" என்று. அதற்கு அக்குரல் கூறுகின்றது "தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே" என்று இச்சம்பவத்தின் பின் பேதுருவினால் ரோம படைகளின் நூற்றுக்கு அதிபதியும் (அதாவது நூறு படைவீரர்களைக்கொண்ட படைத்தளபதி) புறவினத்தை சேர்ந்தவனுமாகிய கொர்நெலியூவும் அவனது நண்பர்கள், உறவினர்களும் இயேசுவை ஏற்றுக்கொள்கின்றார்கள். இச்சம்பவத்தை கேள்வியுற்ற சீடர்கள் பேதுருவுடன் வாக்குவாதம் பண்ணுகிறார்கள். "நீர் எப்படி புறவினத்தாருக்கு ஞானஸ்ஞானம் கொடுத்து அவர்களுடன் சமமாக போஜனம் பண்ணினீர" என்று அதற்கு பேதுரு தான் யோப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டணத்தில் கண்டகாட்சியை உதாரணமாக கூறுகின்றார். அதாவது அக்காட்சியின் அர்த்தம் யாதெனில் தேவன் படைத்தவரகளை மனிதன் ஜாதி, பேதம், மொழி, இனம் என்று பிரித்துப்பார்க்காமல் அனைவரையும் அரவணைத்துக்கொள்ளவேண்டும்.

"தீட்டும் அசுத்தமும் உள்ள எதனையும் நான் புசிப்பதில்லை" என்று பேதுரு கூறியவுடன் ஆண்டவர் "தேவன் சுத்தமாக்கியவைகளை நீ தீட்டாக எண்ணாதே" என்று இதன் அர்த்தம் தேவனுடைய நற்செய்தி தீண்டப்படாதவர்கள் என அழைக்கப்படும் புற ஜாதியாருக்கும் பரவவேண்டும் என்பதே.

எனவே கிறிஸ்தவ மதம் ஒரு குறிப்பிட்ட இனத்தவர்களுக்குரியதன்று உலகத்திலுள்ள அனைவரையும் மீட்பதற்கே கடவுள் தன்னுடைய ஒரே குமாரனை உலகிற்கு அனுப்பினார். சங்கீதக்காரன் மிகவும் அழகாகப்பாடுகின்றான் (சங்33:13-14) "கர்த்தர் வானத்திலிருந்து நோக்கிப்பார்த்து எல்லா மனுப்புத்திரரையும் காண்கிறார்". தாம் வாசமாய் இருக்கின்ற ஸ்தானத்திலிருந்து பூமியின் குடிகள் எல்லோர் மேலும் கண்ணோக்கமாய் இருக்கிறார்.

கிறிஸ்தவம் நீதிமான்களையும் கொண்டுள்ளது. அதேசமயம் பாவிகள், ஒதுக்கப்பட்டவர்கள், பிணியாளர்கள் ஆகியோரையும் அரவணைத்துக்கொள்கின்றது. எனவே ஆசிரியத்துவத்தில் ஈடுபாடு கொண்டுள்ளநாமும் இயேசு கிறிஸ்துவின் போதனைகளின் படி நடந்து அப்போதனைகளை வேறுபாடுகளுக்கும் குல, இன பேதங்களுக்கும் அப்பால் நின்று முழு உலகிற்கும் தெரியப்படுத்துவது நம் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

எஸ்.பி.தேவதீபன்.
நூலகப்பொறுப்பாளர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சபையும் மனித மாண்பும்

திருச்சபை என்பது மக்களையே குறிக்கும். அது அடையாளமாகவும் மறைப்பொருளாகவும் திகழ்கின்றது. நாம் அனைவரும் இறைமக்களாகவும் உயிர்த்த கிறிஸ்துவிலே ஒன்றித்துள்ளோம். கிறிஸ்துவால் நிறுவப்பட்ட இத் திருச்சபைக்கு ஒரு நீடித்த வரலாறு இருந்தபோதிலும் இன்றைய காலகட்டதிற்கு ஏற்ப செயற்பட்டு வருகின்றது. திருச்சபையின் மனித இயல்பு பலவீனமுள்ளது. எனவே இப்பலவீனமுள்ளதை வல்லமையாக்குபவர் இறைவன். கிறிஸ்துவின் மீட்புத் திட்டப்பணியானது பரிசுத்த ஆவியின் ஆற்றலால் திருச்சபை தொடர்ந்தும் செயலாற்றி வருகின்றது. இதனாலே திருச்சபையை கிறிஸ்துவின் மறையுடல் என்கின்றோம்.

திருச்சபையானது தனது மீட்புப் பணியைச் செவ்வனே செய்து வருகின்றது. இப்பணியானது பொதுநிலையினருக்கும் துறவிகளுக்கும் இதிலே மிகப்பெரிய பங்குண்டு. சமூகப்பொருளாதார வளர்ச்சிக்காக இவ்வுலகில் இறைமக்கள் உழைத்து வருகின்றனர். சமுதாயத்தேவைகளுக்கு விழிப்புணர்வோடு இருக்கின்றனர். அவற்றை நிவர்த்தி செய்யத் தம்மாலான உதவிகளை செய்கின்றனர். இன்றைய திருச்சபையின் செயலூக்கத்தின் உதவிகளை பொறுத்தவரையில் உணவு, உடை, உறைவிடம் இல்லாதவர்களுக்கு வசதி செய்கின்றது. சமூகப்பண்பாட்டு இயல்பு மட்டுமல்ல அறிவியல், பொறியியல் தொழிற்கலை ஆகியவையும் செயற்பாட்டுக்குள் அடங்கும். எனவே மனிதனானவன் தனது உணர்வுபூர்வமான சிந்தனையுடன் இதனை ஏற்று செயற்பட வேண்டும். மீட்பையும் விடுதலையையும் கருத்திற் கொண்டுதான் இறைமக்கள் நற்செய்தி அறிவிக்கின்றனர். மாறாக படைக்கப்பட்ட மனிதன் நானொரு மனித ஆள் என அறிந்துகொள்ள உதவிபுரியும் புத்துயிர் பெற்ற ஓர் ஆன்மீக சமூதாயத்தை உருவாக்குவதே திருச்சபையின் நோக்கமாகும். எனவே திருச்சபையானது இறைவனை அடைய உதவதோடு மானிட சகோதரத் துவத்திற்க்கும் வழிக்காட்டுகின்றது. இவ்வுலகின் இறையரசிற்கு சகோதரத்துவமே மேலானது அல்லது ஒரு அடித்தளமாகும் எனலாம். இன்றைய உலகின் வளர்ச்சிக்கேற்ப திருச்சபையும் முழு வளர்ச்சிபெற விரும்புகின்றது.

நிறைவான சமுதாயமான திருச்சபையை உலகிற்கும் மனித குலத்திற்கும் பணிசெய்து உலகில் இறை முன்னேற்றத்திற்காக உழைத்து அமைதியை நிலைநாட்டுவதே திருச்சபையின் நோக்கமாகும். இறைவனின் படைப்புக்களில் மிகச் சிறந்த படைப்பு மனிதனே ஆவான் தன் மாண்பையும் மக்களின் ஒற்றுமையையும் சமாதனத்தையும் நன்குணர்ந்து உலகில் தன் வாழ்வில் இருக்கும் தடைகளை மனித மான்பிற்கு ஏற்ப உதிர்த்துப்போராடி ஒத்துழைக்க வேண்டுமெனவும் திருச்சபை வழியுருத்துகின்றது.

மனித மாண்பானது மனிதன் சமூகம் உலகமுழுவதிலும் மனித செயல் இன்றைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் செயற்பட்டு வருகின்றது. இன்றைய உலகில் திருச்சபையின் ஒவ்வொரு வளர்ச்சியும் நிறைவும் குறைவும் உள்ளதாக காணப்படுகின்றது. மனிதனாவன் திருச்சபையின் பண்புகளை இன்னும் முழுமையாக கண்டுபிடிக்கப்பட வில்லை என்றே கூறலாம். அதாவது அன்பு, சமாதானம், ஒற்றுமை, சகோதரத்துவம் விட்டுக்கொடுத்தல், ஒன்றித்தல், நம்பிக்கை, விசுவாசம் போன்ற நற்குணங்களை தனது வாழ்கையில் கடைபிடித்து வாழ்ந்த வந்தால் நல்லதொரு கிறிஸ்த்தவ சமுதாயத்தையும் திருச்சபையையும் கட்டியெழுப்ப முடியும். என்பதும் ஆனால் விரைவாக வளர்ந்து கொண்டிருக்கும் உலக மாற்றங்களின் ஒரு புறம் வறுமை, நோய், வேலையின்மை, போதிய கல்வியறிவின்மை போன்றவையும் மறு புறம் சமூகம் சாதிக்கட்டுப்பாடு போர்வன்முறை போன்ற சுசந்திரமற்ற செயற்பாட்டின் காரணமாக மக்கள் மத்தியில் அமைதி தேவைப்படுகின்றது. எனவே மனித குலம் தான் அடைய வேண்டிய இலட்சியத்தை திருச்சபை சுட்டிக்காட்டுகிறது.

இன்றைய உலகில் மனிதனின் மகிழ்வும் நம்பிக்கையுமானது விசுவாசமும், ஏக்கமும், கவலையுமாகும் ஆகவேதான் இக்கால பிரச்சனைகளைத் தனதாக்கிக்கொண்டு நற்பணி புரிய எமது திருச்சபை முன் வருகின்றது. தனி மனிதனும் குடும்பமும் நாடுகளும் பிளவு பட்ட நிலையில் உள்ளனர். மனிதனையும் உலகத்தையும் இணைத்து செயற்படவும் மனிதன் மாண்புடன் செயற்படவும் விரும்பி இணைக்கின்றது திருச்சபையாகும். உண்மையிலும் வாழ்விலும் புனிதத்திலும் அருளிலும் நீதியிலும், அமைதியிலும் பண்பிலும் கட்டுப்பட வேண்டுமெனக் கூறுகின்றது. இன்றைய உலகில் பிரச்சனைகளுக்கு மனவுறுதி இழக்கவிடாது பிரச்சனைகள் வழியில் தேவஆவி தீர்ப்பினை வழங்கிக்கொண்டு வருகின்றது. எனவே திருச்சபை கிறிஸ்து ஏற்படுத்திய மீட்பின் அருட்சாதனமே எனலாம். மனிதனின் உள்ளத்தில் நம்பிக்கை என்னும் தீபத்தை ஏற்றி வைக்கின்றது. மனித மான்பின் நம்பிக்கை மனிதன் மென்மேலும் மனிதனாகும் நம்பிக்கை பிளவுபட்ட மனித குலம் ஒன்றுபடும் நம்பிக்கை ஒழுக்கம் நிறைவுபெறும் நம்பிக்கை இவ்வுலக வாழ்விற்கு மேலாக நித்திய வாழ்வு உண்டு என்னும் நம்பிக்கை வளர்த்தல்

எனவே இன்றைய திருச்சபை உலகை உருவாக்கும் பணிவுடையது என உணரவேண்டும். கிறிஸ்த்து விரும்பும் ஓர் உலகாக அதனை மாற்றியமைக்க வேண்டிய பொறுப்பு உன்னுடையது மனிதனின் உயர் மாண்பிற்கு ஏற்ப அவனியை அமைக்க முன்வரவேண்டும் இதற்காகவே திருச்சபை என்றும் விரும்புகின்றது.

எஸ். அன்சலம்
ஆரம்பப்பிரிவு
விடுகையாண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தூயவனாக்கும் தூய ஆவி



இவ்வுலகில் வாழும் அனைத்துக் கிறிஸ்த்தவர்களும் தம்முடைய மீட்புடன் தொடர்புடைய முப்பெரும் நிகழ்ச்சிகளைக் கொண்டாட மறப்பதில்லை. அதில் கிறிஸ்துவின் பிறப்புப் பண்டிகை. மற்றைய ஒன்று உயர்த்தெழுதலை நினைவுகூரும் பண்டிகையானது ஈஸ்டர் பண்டிகையாகும். ஆயினும் முதல் இரண்டு பண்டிகையையும் கொண்டாடி மகிழ்கின்றோம். முதலாவது கிறிஸ்துவின் பிறப்பையும் அடுத்து அவரின் இறப்பையும் உயிர்தெழுதலையும் கொண்டாடி மகிழ நாம் மூன்றாவதாக வரும் முக்கியமான திரு நாளான பெந்தகோஸ்து திருநாளை மறந்து விடுகின்றோம். அது வருவதும் தெரியாது அது போவதும் தெரியாது. ஆவியனவரின் வருகையை இவர்கள் ஒரு பொருளாக நினைப்பதில்லை.

"தூய ஆவியானவர்" என்ற பெயர் கிறிஸ்தவர்களுக்கு பழக்கப்பட்டு விட்ட பெயர்தான் "பிதா குமாரன்" "பரிசுத்த ஆவ" என்ற பெயரைக் கேட்டுக்கொண்டே இருக்கிறோம். ஆயினும் நமது திருச்சபையிலுள்ள பெரும்பான்மையானவர்களுக்கு தூய ஆவியானவரைப்பற்றி ஒன்றும் தெரியாது என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும்.

இயேசுக்கிறிஸ்துவை தங்கள் ஆண்டவராக ஏற்றுக்கொண்டு அவருடைய சரீரமாகிய திருச்சபையில் உறுப்புகளாக இருக்கின்றவர்கள் எல்லோருமே தூய ஆவியானவரை பெற்றிருக்கிறார்கள் என்று திருமறை தெளிவாக எடுத்துரைக்கின்றது. தம்மிடம் இறைஞ்சிக் கேட்கும் அனைவருக்கும் யாதொரு குறையுமின்றி விலையுமின்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்முடைய ஆவியை கடவுள் கொடுக்கின்றார் எனவும் திருமறை கூறுகின்றது. இயேசுக்கிறிஸ்துவிற்குரியவர்கள் யாராயினும் அவன் ஏழையோ பணக்காரனோ எப்படிப்பட்டவனானாலும் அவர்கள் அனைவரும் அவர் அருள்கின்ற வரங்களை ஒரு சேரப் பெருகின்றனர். இதனையே நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள் என்றும் தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறது என்றும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் அறியாது தவறுவிடுகின்றீர்களா? என்று எம்மை நாமே கேட்டுக்கொள்வதுடன் "ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால் அவனை தேவன் கெடுப்பார். தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கின்றது. நீங்களே அந்த ஆலயம்" (1 கொரி 3:16,17) என்று எம்மையே கண்டுபிடிக்குமிடத்து உங்கள் சரீரங்கள் கிறிஸ்து யேசு குடிகொள்ளும் அவயங்கள் என்பதனை உணர்த்துகின்றது. "உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியிருக்கின்ற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாகின்றன. என்றும் நீங்கள் உங்களுடையவர்களல்ல" (1 கொரி 6:15-19) என்றும் உரைக்கின்றார் புனித பவுல்.

பரிசுத்த ஆவியை பெறாத புறசாதியராக ஒருவர் இருந்து அவர் பாவங்கள் செய்து எவ்வளவு கொடியவனாக அவரை தாக்குமோ அதைவிட மிகமிக கொடியது பரிசுத்த ஆவியை எம்முள் பெற்று நாம் மென்மேலும் செய்யும் பாவங்களை கட்டிக்கொள்கின்றோம். உதாரணமாக அப்போஸ்தலர் பணியில் 5ம் அதிகாரத்தில் வரும் அனனியா, சாம்ப்ராள் என்பவர்களுடைய கதையில் நாம் இதனையே காண்கின்றோம். புதிய ஏற்பாட்டில் ஆவியானவரை பற்றி சொல்லப்படுவதாவது "கிறிஸ்துவின் ஆவியே ஆவியானவர்" கிறிஸ்துவை பற்றி செழுஞ் செய்திகளை மக்களுக்கு விளங்க எடுத்துரைப்பது ஆவியானவரின் வேலை உண்மை, அன்பு, பரிவு, கருணை, என்று கிறிஸ்துவிடமுள்ள சத்தியங்களை நமக்கு தெரிவிப்பது மாத்திரமன்றி யேசுவுடன் வாழும் வாழ்வை அளிக்கும்வழிகாட்டியும் இவரே ஆவார். ஒருவரிடமும் யேசுவின் சாயல் பிரதிபலிக்கின்றதோ அந்த ஒருவனிடத்தில் தூய ஆவியானவர், எழுந்தருளுவார் என்பது திருச்சபை அறிவித்த உண்மை.

ஆகவே பிதா சுதன் பரிசுத்த ஆவி என்பது ஒன்றை விட்டு ஒன்று பிரிக்கமுடியாத பரம்பொருள். இவர்கள் வழியில் இவர்களை பிரதிபலிக்கும் முகமாக வாழ்வதே சிறந்த கிறிஸ்தவன் என்ற ஒழுக்க முறையில் தூயவனாக இச்சமூகத்தில் வாழ முடியும் என்பது திண்ணம்.

செல்வி.ரமணிசிவன்
ஆரம்ப பிரிவு
விடுகையாண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசுவாசமுள்ள செபம்.

உலகியல் வாழ்க்கையை எடுத்து நோக்கின் இதிலொரு உண்மைக் கிறிஸ்தவனின் ஆத்மீக வாழ்க்கை வித்தியாசமானது. இதில் விசுவாசம் அன்பு, நம்பிக்கை என்ற மூன்று அம்சங்களும் பிரதானமாக காணப்படுகின்றது. இவற்றில் ஒன்றான விசுவாசத்தை எடுத்து நோக்கினால் "விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயம்" என்று தேவ வசனம் கூறுகின்றது. விசுவாசமானது ஒவ்வொரு மனிதனிலும் இருக்கின்றது. இதை ஆரம்பிப்பவரும் முடிப்பவரும் கர்த்தரே. இந்த விசுவாசமானது கிறிஸ்தவ வாழ்கையிலும் அல்லது செப வாழ்க்கையிலும் எவ்வாறு உறுதுணையாக இருந்துள்ளது, எவ்வாறு இருக்க வேண்டும் என்று எடுத்து நோக்குதல் வேண்டும்.

எம்மில் அநேகர் வேதத்தை வாசிக்கிறோம். செபிக்கிறோம். ஆனால் நாம் செபத்தில் கேட்பது எமக்கு கிடைப்பதில்லை. இது ஏன் என்ற வினாவை எழுப்பினால் நாம் எவ்வாறு நமது தேவையை கருத்தோடும், விசவாசத்தோடும் கர்த்தரிடத்தில் ஒப்புவிக்கின்றோம். என்பதன் அடிப்படையிலே தங்கியுள்ளது. "நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் செபத்தில் எவைகளை கேட்பீர்களோ அவைகளை எல்லாம் பெறுவீர்கள்" (மத்தேயு 21:22) என்று வேதம் கூறுகின்றது. ஆனால் நாமோ ஏனோதானோ என்று செபிப்பது இல்லாவிட்டால் செபிப்பதற்கு பயப்படுதல் போன்ற பல்வேறு காரணங்களால் தேவைகள் நிறைவேறாமல் போகின்றது. நாம் செபிக்கும்போது இது கிடைக்கும் என்ற விசுவாசத்தில் செபிக்கவேண்டும். கிடைக்குமா கிடைக்காதா என்ற இரு மனதோடும் (அவிசுவாசத்தோடும்) செபிக்கக்கூடாது. வேதாகமத்தில் இதற்குப் பலர் உதாரணமாக உள்ளனர். விசவாசததின் தந்தையான ஆபிரகாமை பார்த்தால் கடவுள் உனது முதிர் வயதில் உனக்கொரு மகன் பிறப்பான் என்று ஆபிரகாமுக்கு கூறும் போது ஆபிரகாமின் மனைவியாகிய சாராள் நகைக்கிறாள். நான் முதிர் வயதானவள் என் புருஷன் முதிர்வயதானவர் என்று ஆனாலும் ஆபிரகாம் விசுவசித்தான் தனது நூறாவது வயதில் ஈசாக்கை மகனாக பெற்றான். இது தான் விசுவாசம் மனிதன் இது நடக்காது என்று கூறும் போது இது கடவுளால் கூடும் என்று நம்புவதே விசுவாசம்.

சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்ற மூன்று வாலிபர்களை சிலையை வணங்காத காரணத்தினால் அரசன் அக்கினிச் சூழையில் போடும் படி கூறினான். ஆனால் அந்த வாலிபர்களோ எங்கள் தேவன் எங்களை அக்கினியில் இருந்து தப்புவிக்க வல்லவர் என்று விசுவாசித்தார்கள். அதேபோல் அக்கினிச் சூலைக்கு இவர்களை தூக்கிச்சென்றவர்கள் மரித்துப்போனார்கள். இவர்கள் மூவரும் தலைமயிர் கூட கருகாமல் வெளியே வந்தார்கள். இதுதான் விசுவாசம். "உனக்கு கடுகளவு விசுவாசமிருந்தால் இந்த மலையைப் பார்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விடம் விட்டு அப்புறம் போ என்று கூற அப்புறம் போகும்" (மத்தேயு 17:20) என்று வேதம் கூறுகின்றது. இவ்வாறான் விசுவாசமுள்ளவர்களாகவே இம்மூன்று வாலிபரும் இருந்தார்கள். இந்த கடுகளவான விசுவாசம் எமக்கிருந்தால் நமது தேவைகளும் இலட்சியங்களும் நிறைவேறும். நாம் எவ்வாறு விசுவசிக்கிறோம். வேதம் கூறுகிறது விசுவாசம் இல்லாத செபம் உயிரற்றதாய் இருக்கும் (யாகோபு 2:20) என்று நாம் செவிப்பது இவ்வாறனதொரு செபத்தைத்தான். எத்தேவைகளுக்காக செபித்தாலும் விசுவாசத்தோடு செபிக்கவேண்டும் அது கொடும்ப பிரச்சனை, திருமணவாழ்க்கை, பணத்தேவை, நோயிலிருந்து விடுதலை போன்ற பல்வேறு தேவைகளாக இருக்கலாம். இவைகளெல்லாம் கிடைக்கும் என்ற விசுவாசமே பிரதானமானது. விசுவாசத்தினால் தான் யோபு என்ற (வேதாகமத்தில்) பக்தன் நீதிமானாக எண்ணப்பட்டான். வேதத்தில் பெரும்பாடுள்ள (உதிர ஊறல்) ஸ்திரீ யேசுவை பற்றி கேள்விப்பட்டு கூட்டத்தில் செல்கின்ற யேசுவின் வஸ்திரத்தின் ஓரத்தை தொட்டால் கூட சுகம் கிடைக்குமென்று விசுவாசித்தால் அந்த விசுவாசத்தை செயல்படுத்தினாள். வஸ்திரத்தின் ஓரத்தை தொட்டாள் சுகம் கிடைத்தது. "கேட்கும் போது எவ்வளவாகினும் சந்தேகமில்லாமல் விசவாசத்தொடு கேட்கக்கடவான் (யாக்கோபு 1:6) "கிரியைகளில் இல்லா விசுவாசமும் உயிரற்றதாயிருக்கின்றது". (யாக்கோபு 2:26) இந்த வசனங்களின் படி ஸ்திரி செய்திருக்கிறாள் அற்புதத்தை கண்டாள்.

நாம் செபிக்கும் போது விசுவாசத்தோடு செபிப்போம். எங்களது தேவை இன்னதென்று தெளிவாய் கர்த்தரிடத்தில் சொல்லவேண்டும். செபிக்கும் போது கருத்தாய் உண்மையாய் செபிக்கவேண்டும். இவ்வாறு செபிக்கும் போது கர்தரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. என்று விசுவாசித்து செபிக்க வேண்டும் அப்பொழுது விசுவசிக்கின்றவனுக்கு எல்லாம் கூடும். இவ்வாறு நாம் செய்வோமானால் எங்களது செபங்களுக்கான பதில்கள் ஏற்ற வேலைகளில் கிடைக்கப்பெறும். நாமும் கர்த்தரில் அன்பும் விசுவாசமும் கொள்வோம் இதை மற்றவர்களோடு சாட்சியாக சொல்லும் போது கடவுளின் நாமம் மகிமை பெறும்.

திருமதி.வி.எலிசபெத்
தமிழ் பிரிவு
விடுகையாண்டு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை திரேசாவிற்கு வழங்கிய விருதுகள்.

| | | |
|---|---|---|
| 1. | 1962. | பத்மஸ்ரீ விருது. |
| 2. | 1962. | மாகசேசேவிருது. |
| 3. | 1971. | போப்ஜோன் போல் - சமாதான பரிசு |
| 4. | 1971. | ஜோசப்கெனடி - ஜூனியர் விருது |
| 5. | 1971. | நல்ல சமாரியன் பரிசு |
| 6. | 1972. | ஜவஹர்லால்நேரு விருது |
| 7. | 1972. | தர்மதேவ தூதர் விருது |
| 8. | 1973. | டெம்பில்டோன் பரிசு |
| 9. | 1975. | அரபர்ட் ஸ்வைட்சர் பரிசு |
| 10. | 1979. | நோபல் பரிசு |
| 11. | 1980. | பாரத ரத்னா விருது |
| 12. | 1983. | ஆர்டர் ஒப் மெரிட் ([illegible]) |
| 13. | 1985. | அமெரிக்க அதிபரின் சுதந்திர பதக்கம். |
| 14. | 1992. | பாரத் கீ சுப்பர் பிட்ரி |
| 15. | 1993. | ராஜீவ்காந்தி விருது |
| 16. | 1994. | அல்பேனிய நாட்டின் தங்க விருது. |
| 17. | 1996. | அமெரிக்காவின் குடிமகள் விருது. |
| 18. | 1997. | அமெரிக்காவின் தங்கப்பதக்கம். |

- ஹர்வோட் பல்கலைகழகத்தில் பட்டம்.
- சென்னை பல்கலைக்கழகத்தில் பட்டம்.
- கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பட்டம்.
- விஸ்வபாரதி கழகத்தின் பட்டம்.
- கத்தோலிக்க பல்கலைகழகத்தில் பட்டம்.

இவையாவற்றையும் மேலாக உலகோர் உள்ளங்களிலே அன்னை பெற்ற பட்டம். உண்மையிலேயே இந்திய மண் பெற்றெடுத்த பெருமைமிக்க பரிசு அன்னை திரேசா

பீ. நிரஞ்சனி.
ஆரம்பப்பிரிவு
முதலாம் வருடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவத்தின் தொன்மை.

கிறிஸ்தவ மதம் மிகத்தொன்மை வாய்ந்தது. கிறிஸ்தவத்தின் பழமையையும் பெருமையையும் அறியாதவர்கள். கிறிஸ்து பிறப்பிலிருந்தே கிறிஸ்தவ சமயம் தோற்றம் பெற்றதாக கருதுகின்றனர். இது அவர்களின் அறியாமையாகும்.

கிறிஸ்தவ மதத்தின் இரு பெரும் பொக்கிசங்களாக பழையஏற்பாடும் புதிய ஏற்பாடும் விளங்குகின்றன. புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் பிறப்போடு கூடிய அவரது வாழ்க்கை வரலாறும் அவர் வாழ்ந்து காட்டிய நெறிமுறையும் கிறஸ்துவின் வியத்தகு புதுமைகளையும் அவர் அப்போஸ்தலர்களுக்கு காட்டிய பரிவன்பையும் உள்ளடக்கியதாகும். அவர் இறைவனின் மகன் என்பதையும் தனது உயிர்த்தெழுதல் மூலம் நிருபித்த வரலாறே புதிய ஏற்பாட்டில் அடக்கப்பட்டுள்ளது.

ஆதிக்கிறிஸ்தவம் என்பது பழைய ஏற்பாட்டில் அடக்கப்பட்டுள்ளது. இறைவனின் படைப்புகளை எடுத்தியம்புகின்றது. ஆதிப்பெற்றோரான ஆதாம், ஏவாள் படைப்பிலிருந்து ஆரம்பித்து தாவீது குலத்தில் உதித்த ஆபிரகாமின் சந்ததியினரின் வாழ்வும் வரலாறும் பழைய ஏற்பாட்டில் அடக்கப்பட்டுள்ளது.

தொல்லியல் ஆய்வு நிபுணர்களின் ஆய்வின் படி உலக மனிதனின் முதற் தோற்றம் மத்தியஆசியாவிலே தோற்றம் பெற்றிருக்கின்றது. இங்கு மத்திய ஆசியா எனக் குறிப்பிடப்படுவது மொசப்பத்தேமியா என்றழைக்கப்படும் ஈராக் பிரதேசமாகும். இப்பிரதேசத்திலேயே ஆதிக்கிறிஸ்தவ நாகரீகம் தோற்றம் பெற்றது.

யூப்பிரதீஸ், தைகிரீஸ் நாடுகளுக்கிடையில் மொசப்பெத்தேமியா பிரதேசம் காணப்படுகின்றது. ஆதிப்பெற்றோரான ஆதாமுக்கும் ஏவாளுக்கும் இறைவனால் வழங்கப்பட்ட ஏதேன் தோட்டமும் இப்பிரதேசத்தை அண்டியே காணப்படுகின்றது. இது கிறிஸ்தவத்தின் பழமைக்கு சான்றாகும். மத்திய ஆசியாவில் ஆதி மனிதனின் தோற்றத்தின் பின்பு நதிக்கரைகளை நோக்கி ஏனைய நகரங்கள் நகர்வு பெற்றிருக்கின்றது. பழமை வாய்ந்த நதி நாகரீகங்கள் கிறிஸ்வத சமயத்தை, கிறிஸ்தவ பண்பாட்டை ஒட்டியே தோற்றம் பெற்றிருந்தன. இதற்கு எகிப்திய பாபிலோனிய கிரேக்க கல்வெட்டுகளும் அங்கு வாழ்ந்த மக்களின் வாழ்வு முறையும் சான்றாகின்றன.

மேலும் இஸ்ராயேல் மக்களின் வாழ்வும் தாவீது அரசனை தெய்வமாகப் போற்றுகின்ற




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பும் கிறிஸ்தவத்தின் தொன்மைக்குச் சான்றாகும். இதுமட்டுமல்லாமல் மத்திய கிழக்கில் இஸ்ரவேல் நாட்டின் பழம் பெரும் ஜெருசலேம் ஆலயம் இன்னும் பொலிவுடன் காணப்படுகின்றது. ஜெருசலேம் ஆலயமே யூதர்களினது ஆதி மூலமாகும்.

பழைய ஏற்பாட்டில் குறிக்கப்பட்டுள்ள பிரதேசங்களின் நாமங்கள் வேறு பெயர்களால் தற்போது அழைக்கப்பட்டு வருகின்றது. மோயீசன், பார்வோனின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரேல் மக்களை மீட்டு செங்கடலைக்கடந்தும் வந்த பொழுது ஒரு சிலை தோற்றம் பெற்றது. அச்சிலை இன்னும் உள்ளது. அதை தெய்வமாக வழிபடுபவர்களும் இன்னும் இருக்கின்றார்கள். இதிலிருந்து நாம் கிறிஸ்தவத்தின் தொன்மையையும் பழமையையும் அறியமுடிகின்றது.

பி.ராஜபதி
விவசாயப்பிரிவு
முதலாம்வருடம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் விவிலிய வரலாறு...

இந்தியமொழிகளிலே அதிகமான விவிலிய மொழி பெயர்ப்புக்களை செய்த மொழி தமிழ் மொழியாகும். தமிழ் விவிலிய வரலாறு பற்றி பல ஆய்வுக்கட்டுரைகள் எழுதியுள்ள அருட்தந்தை முனவைர் எஸ்.மிக்கேல். இருதயத்தின் கணிப்புப்படி தற்போது வெளிவந்துள்ள பொது விவிலியம் அல்லது விவிலியப்பகுதி 24வது தமிழ் மொழிபெயர்ப்பாகும்.

1954ல் லிஸ்பனில் இயேசு சபையைச்சார்ந்த போர்த்துக்கள் நாட்டுத்தொண்டர்கள் எட்டுப் பேர் கர்த்தர் கற்பித்த செபத்தை தமிழில் மொழிபெயர்த்தனர். இக்காலப்பகுதியிலேயே மத்தேயுவினதும் யோவானினதும் நற்செய்தி மொழிப்பெயர்க்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து பதினேழாம் நூற்றாண்டு காலப்பகுதியான 1965ம் ஆண்டில் பல்தேயு என்பவர் மத்தேயு நற்செய்தியை மொழி பெயர்த்தார். பல ஆண்டுகள் இது கையெழுத்துப்பிரதியாக இருந்தது. 1774ல் அச்சுப்பிரதி உருவாக்கப்பட்டது. அதே வேளையில் டிமே என்பவர் புதிய ஏற்பாட்டை மொழி பெயர்த்தார். இதுவும் அச்சிடப்பட்டதாக தெரியவில்லை. 18ம் நூற்றாண்டுப்பகுதியில் சீகன்பால்டு என்பவர் தரங்கப்பாடியில் 1714-15ல் புதிய ஏற்பாட்டையும் 1719ல் பழைய ஏற்பாட்டுத் தொடக்க நூல் முதல் ரூத் வரை மொழி பெயர்த்தார். சூல்ஸ் என்பவர் ஏனைய நூல்களை மொழி பெயர்த்து வெளியிட்டார். 1741ல் மத்தேயு நற்செய்தியை கிராமரும் 1712ல் புதிய ஏற்பாட்டு நூல்களை வெர்சேலியுஸ்சும் (நான்கு நற்செய்திகள்) 1957ல் புதிய ஏற்பாடு முழுவதையும் டிமெல்லோ என்பவரும் இந்நூற்றாண்டின் இரண்டாவது முக்கிய விவிலிய மொழிபெயர்ப்பை பப்ரீசியூ என்பவரும் மொழி பெயர்த்து வெளியிட்டனர். பப்ரீசியூவே விவிலியம் முழுவதையும் தமிழில் மொழி பெயர்த்தார்.

19ம் நூற்றாண்டு காலப்பகுதியிலே 1833ல் இரேனியூ என்பவர் புதிய எற்பாட்டையும் ப்பரீசியின் மொழிப்பெயர்பின் திருத்திய வடிவம் 1858ல் பெர்சிவேல் என்பவரால் முழு விவிலியமும் மொழி பெயர்த்து வெளியிடப்பட்டது. 1957ல் பாரிஸ் வெளிநாட்டு மறைத் தூது பணியாளர்கள் இலத்தின் உள்காத்தாவிலிருந்து கத்தோலிக்க புதிய ஏற்பாட்டை வெளியிட்டனர். பவர் என்பவர் 1864ல் பழைய ஏற்பாட்டையும் 1868ல் புதிய ஏற்பாட்டையும் 1871ல் முழுவிவிலியத்தையும் மொழி பெயர்த்து வெளியிட்டார்.

2ம் நூற்றாண்டு பகுதிகளிளே மொழிப்பெயர்க்கப்பட்ட நூல்களும் மொழி பெயர்த்தவர்களும் பின்வருமாறு.

1904. பழைய ஏற்பாட்டின் முதல் கத்தோலிக்க மொழி பெயர்ப்பு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1912. நான்கு நற்செய்தி நூல்கள்
1922. புதிய ஏற்பாடு - ஞானப்பிரகாசர்
1928. புதிய ஏற்பாடு
1936. விவிலியம் முழுவதும் - சார்சன்
1947. விவிலியம்முழுவதும் - மோனகன்.
1970. கிரேக்க மொழியிலிருந்து புதிய ஏற்பாடு (தமிழக ஆயர் பேரவை)
1973. பழைய ஏற்பாடு திருத்திய பதிப்பு
1975. புதிய ஏற்பாட்டின் மொழி பெயர்ப்பு (இந்திய விவிலிய சங்கம் ராஜரீகம்)
1995. பொது விவிலியம் கத்தோலிக்க திருச்சபையும் இந்திய விவிலியச் சங்கமும் இணைந்து மொழி பெயர்த்தது.

வேறு எல்லா மொழிகளையும் விட அதிகமான மொழி பெயர்ப்புகளைக் கொண்ட தமிழ் மக்கள் அன்பு நெறிப்படி வாழ்ந்து இறைவனுக்கு மகிமையும் மக்களுக்கு அமைதியையும் பெருக்கும் கருவிகளாக இருப்பார்களாக.

ஜீலியட் மேரி
தமிழ்ப் பிரிவு
முதலாம் வருடம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்து பிறப்பின் 2000ம் ஆண்டு ஜூபிலி

விழாக்கள் என்றதுமே ஏழையென்ன தனவந்தர்கள் என்ன அனைவருக்கும் ஆனந்தம் தான் இந்த விழாக்கள் சமூகத்தின் துன்பங்களை மறக்கச்செய்கின்ற நிகழ்வாக அமைகின்றன. அத்துடன் உறவுகளை வளர்ப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றன. இறைமகன் கிறிஸ்துவின் மனித அவதாரத்தின் 2000ம் ஆண்டு நிறைவு இவ்வாண்டில் கொண்டாடப்படுகின்றது. மனுக்குல மீட்பின் இரண்டு தசாப்தங்கள் நிறைவடையும் இத்திருவருடத்தை "மாபெரும் ஜூபிலி" என நினைவு கூர்ந்து கொண்டாடும் படி 1995ம் ஆண்டு திருத்தந்தை எழுதிய "2000ம் ஆண்டு வரும் வேளையில" என்ற சுற்று மடல் மூலம் எமது பாப்பரசர் எமக்கு அழைப்பினை விடுத்திருந்தார். இதன் அடிப்படையில் திருச்சபை இதற்காக மகத்தான ஏற்பாடுகளை மேற்கொள்கின்றது. இவ் ஏற்பாடுகள் ஆண்மீக ரீதியிலும் ஆடம்பர கொண்டாட்டங்களின் ஊடாகவும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இந்த ஜூபிலி என்ற சொல் பல அர்த்தங்களைக் கொண்டது. பாவமன்னிப்பு, மகிழ்ச்சி, விடுதலை, ஓய்வு என பொருள் படுகின்றது. இலத்தீன் மொழியில் "ஜூபிலேயோ" என்றும் அதாவது விழாக்கொண்டாடுதல் என்றும் அர்த்தம் கொடுக்கின்றது. இதன் அடிப்படையில் பாவ மன்னிப்பு பெற்ற மகிழ்ச்சியை கொண்டாடுதல் என இதற்கு விளக்கம் கொடுக்கலாம்.

இவ் ஜூபிலியானது இப்போது அறிமுகமானதொன்றல்ல மாறாக வரலாற்றிலே இஸ்ராயேல் மக்களும் திருச்சபையின் வரலாற்றிலும் கொண்டாடப்பட்டு வந்துள்ள ஒரு விழாவாகும். இவ்விழா எவ்வாறு கொண்டாடப்பட வேண்டுமென (லேவியர் ஆகமம் 25:8-55 விவிலியப்பகுதி) பின்வருமாறு கூறுகின்றது.

தொடர்ந்து வரும் ஏழு ஓய்வு ஆண்டுகளை ஏழு முறை எண்ணிக்கையிட்டு 49ஆண்டு எக்காலம் முழங்க செய்யுங்கள் 50ம், ஆண்டை புனிதமாக்குங்கள். அது உங்களின் ஜூபிலி ஆண்டாகும். இந்த ஆண்டைப்பொறுத்தவரை நிலத்திற்கு ஓய்வு வழங்கி வயலிலும் திராட்சைத்தோட்டத்திலும் விளையும் விளைச்சளை ஏழைக்குப் பகிர்ந்து கொடுக்கவும், கடன்களை மன்னிக்கவும் ஒருவர் ஒருவருடன் ஒப்புரவாகி மாபெரும் மகிழ்ச்சியின் நிறைவைக்கொண்டாடும் படி அறிவுறுத்துகின்றது எமது திருச்சபை.

திருச்சபையின் வரலாற்றில் திருத்தந்தை எட்டாம் பொனிபாஸ் முதலாவது ஜூபிலியை பிரகடனப்படுத்தினார். தொடர்ந்து வந்த பல பாப்பரசர்கள் வெவ்வேறு நிறைவுகளுக்கு ஜூபிலிகளை கொண்டாடியதாக கூறப்படுகின்றது. இம்மாபெரும் ஜூபிலிக்காக 1997ம் ஆண்டு முதல் திருச்சபை பல்வேறு ஆயத்தங்களை மேற்கொண்டு வந்துள்ளது. பரிசுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்துவத்தை பற்றி சிந்தித்து தியானிக்க அழைப்பு விடுத்திருந்தது. இதன் அடிப்படையில்

1997. இயேசு கிறிஸ்து
1998. தூய ஆவி
1999. தந்தை இறைவன்
2000. நற்கருணை இறைவன் (மாபெரும் ஜுபிலி)

இவ்வாயத்த வருடங்களை கடந்து வந்த நாம் ஜுபிலி ஆண்டை வந்து அடைந்துள்ளளோம். இதன் அடிப்படையில் இறைவார்த்தையை செவிமடுத்து அதன் படி வாழ்க்கையை நடாத்துவதோடு, திருச்சபையின் நற்செய்தி எல்லா இடங்களிலும் பறைசாற்றப்படவும் அதன் வழியாக புதுப்பிக்கப்பட்ட பகிர்ந்து வாழும் இறை சமூகம் கட்டியெழுப்பப்படவும் எம்மை அர்ப்பணித்தல் இன்றியமையாதது. எனவே இந்நிலையில்லாத இவ்வுலக வாழ்வில் நம்பிக்கை கொள்ளாது இறைவாழ்வை தேடுகின்றவர்களாக செயலாற்ற முற்படுவோம். அதுவே இறைமகன் இயேசுவிற்கு இம் மகிழ்ச்சிக்குரிய ஆண்டில் நாம் செய்யக்கூடியதுமாகும்.

செல்வி. எல். எக்னஸ் மேரி,
ஆரம்ப பிரிவு
விடுகையாண்டு.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளி பிறக்கட்டும்.

இன்றைய நாட்களிலே நாடெங்கும் ஒளிவிழாக்கள் சிறப்பாக நடந்தேறுவதை நாம் காண்கின்றோம். தீபங்கள் ஏற்றி எங்கும் ஒளிவிழா கானங்கள் பாடி மகிழ்வு பொங்க ஆனந்தமாக இவ்விழாவைக்கொண்டாடி வருகின்றோம். ஆண்டுகள் தோறும் காலம் தப்பாது மார்கழி மாதங்களிலே சில்லென்று வாடைக்குளிர் வருத்தியபோதும் விழாவின் சிறப்புகள் சிறிதேனும் குறைவின்றி நடந்தேறி வருகின்றது.

மக்கள் மனங்கள் ஒளிபெற வேண்டும இல்லங்கள் ஒளி பெற வேண்டும் சமூகங்கள் ஒளிபெற வேண்டும் நாடுகள் ஒளிபெற வேண்டும் உலகம் ஒளிபெற்று மகிழ வேண்டும் என்ற நல்ல நோக்கோடு இவ்விழாக்கள் கொண்டாடப்படுகின்றது. என்பது நாம் அறிந்ததே ஆனால் இன்று நாம் காண்பதெல்லாம் இந்த விழாக்கள் பாரம்பரிய விழாக்களாகவும் சம்பிரதாய விழாக்களாகவுமே நடந்தேறி வருவது கவலைக்குறிய ஒன்றாகும்.

இன்றைய காலகட்டத்திலே மனித மனங்கள் இருண்டு கிடக்கின்றன. சமூகங்கள் இருண்ட நோக்கோடு ஒன்றை ஒன்று விழுங்கப்பார்க்கின்றன. நாடு நாட்டோடு மோதி ஒன்றை ஒன்று அழித்து விட கங்கனம் கட்டுகின்றது. சண்டையும் சச்சரவும் குண்டும் கொலையும் யுத்தமும் இரத்தமும் அகதியும் அழிவுமாக உலகம் இருட்டில் மூழ்கி விடுகின்றன. இந்த நிலை மாற வேண்டும். ஒளி பிறந்தது வழி பிறக்க வேண்டும். இவ்வுலகம் அன்புலகமாக மாறவேண்டும். இந்த நல்ல குறிக்கோள்கள் நிறைவு பெற்றால்தான் ஒளிவிழாக்கள் அர்த்தமுள்ளவையாக அமையும். கிறிஸ்து உலகில் பிறந்துள்ளார். அவர் உலகின் ஒளியாக பிறந்துள்ளார். அன்பின் அவதாரமாக பிறந்துள்ளார். சமாதானத்தின் தூதுவராக பிறந்துள்ளார். இந்த மகிழ்ச்சிகரமான செய்தியை உலகிற்கு எடுத்தியம்பும் நிகழ்ச்சியாக கிறிஸ்மஸ் விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. இந்த ஒளி பிறந்த செய்தியினை அடியொட்டியே ஒளி விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. எனவே ஒளி பிறந்தது உலகிலே அந்த அன்பு ஒளி, சமாதான ஒளி மானிட உள்ளங்கள் எங்கும் நிறைந்து ஒளி பரப்ப எல்லோரும் முயன்று ஒளிவிழாக்கள் கண்டு மகிழ்வோம்.

ஜே. சூசையப்பு ரெவல்
விவசாய பிரிவு
முதலாம் வருடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு எங்கே?

அழகு இருக்கும் இடத்தில் அன்பு இருப்பதில்லை, தியாகம் இருப்பதில்லை அன்பும் கருணையும் தியாகமும் குடிகொண்ட இடத்தில் அழகு குடி கொள்வதில்லை. உண்மை அன்பு அது எங்கே? அப்படியே அது இருக்கும் இடத்தை பல இடர்பாடுகளுக்கிடையிலும் பல அல்லள்களுக்கிடையிலும் தேடி கண்டு பிடித்து விட்டாலும் அந்த அன்பு உண்மையானதா? அந்த அன்பு அப்படியே நிலைத்திருக்குமா? இப்படியான ஒரு நிலை ஏற்படும் பொழுது நன்மை பயப்பதை நமக்கு வேண்டியதை தெரிந்துக்கொள்வதும் பிரச்சனையாகிவிடுகின்றது. இன்றைய உலகில் முக்கியமாக இளைஞர்களுக்கிடையே இத்தேர்வானது அவர்களுக்கு ஒரு பெரும் சவாலாகவே அமைகின்றது. இவர்களில் பெரும் பாண்மையினர் புற அழகினைக் கண்டு மயங்கி விடுகின்றனர். அந்த அழகின் பின்னுள்ள கொடூரமான உள்ளம், பண்பற்ற குணம், பக்குவப்படாத மனம், தன்நலம், இரக்கமே இல்லாத இதயம் இவை அவர்களின் கண்களுக்கு தென்படுவதில்லை. இதை அவர்களது அறியாமை என்றே கூறவேண்டும்.

இன்னும் ஒரு சாரார் பிரிவு என்னும் நிலையை எண்ணி அஞ்சுகின்றனர். நாம் அன்பு செய்வோரின் உறவு நிலைக்காது அதன் பின் அதைத்தாங்கும் சக்தி அவர்களுக்கு இல்லை என்றெண்ணி விலகிச் செல்கின்றனர். சில காலத்திற்கு உறவாடி விட்டு பிரிந்து போகலாம், இறந்தும் போகலாம், அல்லது விவாகரத்து செய்து கொள்ளலாம் என்ற நிலைக்கு அஞ்சுகின்றனர். இதனால் அன்பு செய்த ஒருவரை இழப்பதை விட அன்பு செய்யாமல் இருப்பதே மேல். என்று எண்ணுகின்றனர். இதனால் நெருங்கிப் பழக பயப்படுகின்றனர். அப்படியான இழப்புகளிலும் விரக்தியடைந்து தம் வாழ்க்கையையே பாழாக்கிக் கொள்கின்றனர். அவ்வாறான ஒரு இழப்பு வெறுக்கப்பட வேண்டிய ஒரு சம்பவம் அல்ல அது ஒரு பயணத்தின் முடிவு அதை சந்திக்க எந்த வேளையிலும் நாம் ஆயத்தமாக இருக்க வேண்டும். இதில் வெளி ஆயத்தங்களை விட ஆத்மாவின் ஆயத்தம் முக்கியமானது. இவ்வாறான நிலைகளில் இருந்து விடுபட்டு மெய்யன்பு, பண்பு, தியாக சிந்தை கொண்ட மெய்யான உள்ளங்களை இனம் கண்டு உறவுகளை வளர்க்க வேண்டும்.

அன்பை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ளும் போது தான் நமது உறவு உரம் பெருகிறது. நாம் அப்போது தான் அன்பென்னும் சங்கிலியால் பிணைக்கப்படுகின்றோம். போலி நட்பு சந்தர்ப்பவாதிகளின் தொடர்பு பயன்கருதி பின்வருவோரின் உறவுகள் நெடுங்காலம் நிலைப்பதில்லை. பணத்தைக் கண்டு ஆரம்பமாகும் உறவு பணப்பை காலியாகும் வரை போத்தலில் ஆரம்பமாகும் உறவு போத்தல் காலியாகும் வரை அல்லது வெறிதனியும் வரை, பயணத்தில் தொடங்கும் உறவு அப்பயணம் முடியும் வரை மட்டுந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறன நிகழ்வுகளால் இன்று அன்பு, காதல் இரக்கம், பாசம் போன்ற சொற்கள் உலகில் உயிரற்ற உடலாக அர்த்தமிழந்த வெறும் சொற்களாக தென்படுகின்றன. வெளுத்ததெல்லாம் பாலல்ல என்று அறிந்தும் இன்றைய இளைஞர்கள் போலி வெளுப்பின் பின் சென்று வாழ்க்கையில் பெரும் ஏமாற்றத்தை தேடிக்கொள்கிறார்கள். தாமே தம்மை ஏமாற்றிக்கொள்கிறார்கள். புற அழகையும் பொய்யான நடையையும் கண்டு பலவாறு வரணிக்கவும் செய்கின்றார்கள். இவ்வாறான கற்பனைகளால் வீன் மனஸ்தாபங்களுக்கு உள்ளாகின்றனர். அறிந்திருந்தும் சென்று தீக்குள் விழும் விட்டில் பூசசிகளின் நிலைக்கு இவர்களும் ஒப்பாகின்றனர். அதில் அழிந்து போவது தாமே என்பதை எண்ண மறந்து விடுகின்றனர். தன் நண்பர்களுடைய அல்லது தன் அயலானுடைய நிறைகளை பாராட்டுவதும் அவனுடைய வெற்றிகளில் பங்கு கொள்வது மட்டுமன்றி பலவீனங்களை அறிந்து அதன் பின்னர் அக்குறைகளுக்காக அவனை படுகுழியில், பாழுங்கிணற்றில் தள்ளிவிடாமல் அவனுடைய பலவீனங்களுக்காக அவனுக்கு துணையாக இருக்கும் அவ்வன்பையே "ஒருவர் தன் நண்பனுக்காக உயிரைக்கொடுப்பதைவிட மேலான அன்பு வேறில்லை." என்று இயேசு கூறுகின்றார். இந்த அன்பில் தான் தியாகம் கலந்துள்ளது. இங்கு போலித்தனம், பொய், பகட்டு, கள்ளம் ஒன்றும் இடம் பிடிக்காது தியாகத்தின் ஆழத்திற்கு அவை வர முடியாது.

இன்று உலகில் நாம் காண முடியாத இன்றைய உலகில் இல்லாததும் இந்த மெய்யன்புதான் மனிதனது தவறுகள், குறைகள், பலவீனங்கள் எல்லாம் இயல்பானவை. எம் தவறுகளுக்காக இறைவன் எம்மை கைவிட்டு விடுகிறாரா? இல்லையே. அவர்போதித்ததை ஏன் எம்மால் கொண்டு செல்ல முடியவில்லை ஒருவருடைய குறைக்காகவும் தவறுகளுக்காகவும் அவனை படுகுழியில் தள்ளி விரக்தி என்னும் தீயிலிட்டு சாம்பலாக்கி விட வேண்டாம். அவனுடைய பலவீனங்கள் துணையாக இருக்கும் ஒரு நட்பு கிடைத்தால் அவன் ஒருபோதும் வீழ்வதில்லை அவ்வாறான ஒரு நட்பே தியாக சிந்தையுடையது அதுவே மெய்யான அன்பு ஆகவே நாம் பிறப்பில் கொண்டுள்ள அன்பு எவ்வாறானது இந்த ஆழமான உண்மையான அன்பும் எம்மிடமுண்டா? அவ்வாறான ஓர் அன்பனாக நாம் இருக்கின்றோமா? அவ்வாறான நண்பன் எமக்குண்டா? சிந்திப்போம்... தேடுவோம்... சந்திப்போம்...

***அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை எனக்கு உண்டான யாவற்றையும் தானம் பண்ணினாலும் எனது சரீரத்தை சுட்டெரிக்கப்படுவதற்கு கொடுத்தாலும் அன்பு எனக்கிராவிட்டால் எனக்கு பிரயோஜனம் ஒன்றுமில்லை அன்பு நீடிய சாந்தமும், தயவும் உள்ளது அன்புக்கு பொறாமை இல்லை. அன்பு தன்னை புகழாது. இருமாப்பிராது அயோக்கியமானதை செய்யாது தற்பொழிவை நாடாது. சினமடையாது தீங்கு நினையாது அநியாயத்தில் சந்தோசப்படாமல் சத்தியத்தில் சந்தோசப்படும்.***

(1 கொரி 13:3-7)

ஆ.பி.சர்மிலா.
ஆரம்ப பிரிவு
விடுகையாண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிட மகனின் சதையும் இரத்தமும்.

புத்தாயிரமாம் ஆண்டு கிறிஸ்த்தவர்களாகிய எமக்கு புத்துயிர் ஊட்டும் ஆண்டாக அமைகின்றது. நாமெல்லாம் புதுப்பொழிவு பெற்று வாழ வழி சமைப்பது "மானிட மகனின் சதையும் இரத்தமும்" தான் அதாவது தன் உடலையும் இரத்தத்தையும் உணவாகவும் பாணமாகவும் கொடுத்த இறைவனின் ஏக மகன் உன்னை வாழவைக்குமாற்றினை சற்று ஆராய்வோம்.

மனிதன் உயிர் வாழ உணவு அவசியமாகின்றது. ஆனால் அவனது ஆன்மா உயிர் வாழ வேண்டுமானால் இந்த மானிட மகனின் சதையும் இரத்தமும் அவசியமாகின்றது. இவ்வுணவை பெரியவியாழனன்று இறைமகன் இயேசு நற்கருணை எனும் நாமத்தில் ஏற்படுத்தினார். உடல் பசிதீர்க்கும் சாதரண உணவல்ல இது உள்ளார்ந்த ஆன்ம பசிதீர்க்கும் அர்த்தமுள்ள உணவாகவே இத்தேவ நற்கருணை காணப்படுகின்றது. மேலும் இந்த உணவினை பெற்றுக்கொள்ளும் பாக்கியம் கிறிஸ்தவர்களுக்கு மட்டுமே உரித்தானது. இருந்தபோதிலும் நாம் நினைக்கும் போதெல்லாம் பெற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும். உன்னதமான திருப்பலியினூடாகவே இவ்வுணவை நாம் பெற முடியும். அது மட்டுமா? இல்லை. தூய உள்ளத்தோடு மட்டுமே பெறக்கூடிய தூய்மையான உணவு இதுவாகும். எம்முள்ளத்தில் மகிழ்ச்சியை ஏற்படுத்தும் உணவாகவும் சமூகத்துடன் நல்லுறவை ஏற்படுத்தும் ஊடகமாகவும் அமைவது இத்தேவ நற்கருணையாகும். மனக்குழப்பத்துடன் ஆலயத்திற்கு சென்று தேவ நற்கருணை பெற்றுக்கொண்டபின் எமக்குள் இருக்கும் அமைதி வார்த்தைகளால் எடுத்தியம்ப முடியாத அளவிற்கு சக்தி பெற்ற உணவும் இந்த மானிட மகனின் சதையும் இரத்தமுமாகும்.

அத்தோடு "நானே உயிர்தரும் உணவு பாலைவனத்தில் உங்கள் முன்னோர் மன்னாவை உண்டனர். ஆயினும் இறந்தனர். ஆனால் நான் குறிப்பிடும் உணவை உண்பவன் சாகான" என்று வேதாகமத்தில் (அருளப்பர் 6:48-50) வரையிலான வசனங்கள் எடுத்தியம்புகின்றன. இந்த வகையில் நோக்குகையில் முடிவில்லா வாழ்வு பெற்றவர்கள் கிறிஸ்தவர்கள் என்பது பெருமைக்குரிய ஒன்றாகும். அத்தோடு "நான் அளிக்கும் உணவு உலகம் உய்வதற்காக பலியாகும் என் தசையே" என்று அருளப்பர் 6:51ம் வசனம் கூறுகின்றது. இந்த வகையில் எம்மீட்புக்காக தம்மையே அர்ப்பணித்த அன்பர் என்றால் அது கிறிஸ்து மட்டுமே.

அது மட்டுமா? "மனுமகனின் தசையை உண்டு அவரின் இரத்தத்தை குடித்தாலொழிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுள் உயிர் இராது." வேதாகமத்தில் அருளப்பர் 6:53ம் வசனம் கூறுகின்றது. இந்த வசனத்தின் படி நாம் உயிர் வாழ அத்தியாவசியமாக காணப்படுவது மனுமகனின் சதையும் இரத்தமுமாகவே காணப்படுகின்றது. மேலும் நாம் இவ்வுணவை உண்பதால் இறைமகன் இயேசுவின் அரவணைப்பில் இருந்து என்றுமே விலக்கப்படுவதில்லை என்பதனை கீழ் வரும் வேதாகம வாசகம் தெளிவுபடுத்துகின்றது. "என் தசை மெய்யான உணவு என் இரத்தம் மெய்யான பாணம் என் தசையை உண்டு இரத்தத்தை குடிப்பவன் என்னில் நிலைத்திருக்கின்றான். நானும் அவனில் நிலைத்திருக்கின்றேன்" (அருளப்பர் 6:55-56) எனவே கிறிஸ்தவர்களாகிய நாம் இறைவனின் அன்பிலும் அரவணைப்பிலும் என்றும் வாழ வழிவகுப்பது கிறிஸ்துவின் உடலும் இரத்தமும் என்பதில் சந்தேகமில்லை.

தொகுத்து நோக்கின் ஜுபிலி ஆண்டிலும் எம் உள்ளத்தில் ஆன்ம உணவாக வந்து எம்மை ஆட்கொள்ளும் அன்பர் இயேசுவிற்கு முழு மரியாதையுடனும் நன்றி உணர்வுடனும் வாழ வேண்டும்.

அ. சகாய மேரி
தமிழ் பிரிவு
முதலாம் வருடம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசு சமாதானத்தின் தூதுவர்.

"நீதியால் விளையும் பயன் சமாதானம், நீதியின் பலன் அமைதியும்,
என்றென்றும் நீடிக்கும் அச்சமில்லா வாழ்வுமே.
சமாதானமான இருப்பிடத்திலும் அச்சமறியாத
கூடாரங்களிலும் அமைதிநிறைந்த இல்லங்களிலும்
நம் மக்கள் குடியிருப்பர்"

(இசை:32:17-18)

இவ்வாறாக ஆண்டவரின் மீட்பு வரும் என்ற தலைப்பின் கீழ் இறைவாக்கினர் இசையாஸ் முன்னறிவித்துள்ளார். ஏனெனில் ஆதிப்பெற்றோர் செய்த பாவத்தின் விளைவாக அவர்கள் தண்டனைக்குள்ளானார்கள். இருப்பினும் இறைவன் உங்களுக்கொரு மீட்பரை அனுப்புவேன் என்று வாக்களித்தார். எனவேதான் இறைவனின் வார்த்தைகளை மக்களுக்கு முன்னறிவித்த இறைவாக்கினர்களும் மீட்பரின் வருகையைப் பற்றியும் அவர் வந்த பின் மக்களின் வாழ்க்கையானது எவ்வாறு நீதியானதும் உண்மையானதும் சமாதனமானதுமான மகிழ்ச்சியான வாழ்க்கையாக அமையும் என்பதனை முன்னறிவித்துள்ளனர். ஏனெனில் அந்த மீட்பர் சமாதானத்தின் தூதுவரான இயேசு கிறிஸ்துவே ஆவார்.

ஏனெனில் உலக மக்களுக்கெல்லாம் வழியும், ஒளியும், உண்மையுமான கிறிஸ்து சமாதானத்தின் இருப்பிடமாக உள்ளார். எவ்வாறெனில் புனித லூக்காஸ் எழுதிய நற்செய்தியில் சக்கரியாசின் பாடலில் இவ்வாறாக குறிப்பிடப்பட்டுள்ளது.

"இருளிலும் இறப்பின் நிழலிலும் இருப்போருக்கு ஒளி காட்டவும் அமைதிப்பாதையில் நம் காலடிகளை செலுத்தவும் நம் கடவுளின் இரக்கப் பெருக்கத்தால் வானின்று இளஞாயிறு நம்பால் எழுந்து வரும்"

(லூக்-1:78-79)

ஆம், இருளின் ஆட்சியில் ஆட்கொள்ளப்பட்ட இயற்கையானது எவ்வாறாக சூரியோதயத்தை எதிர்ப்பார்த்து ஆவலோடு ஆனந்தமடையுமோ அவ்வாறே பாவம் எனும் இருளின் ஆட்சிக்குட்பட்ட மக்கள் அதிலிருந்து விடுதலை பெறுவதற்காக பிறக்கப்போகும் இளஞாயிறான சமாதானத்தின் தூதுவர் கிறிஸ்துவை ஆவலோடு எதிர்கொண்டிருப்பதை சக்கரியாசின் பாடலின் வாயிலாக உய்த்துணர முடிகின்றது.

மேலும் கிறிஸ்து இவ்வுலகில் உதித்த தினமான நத்தார் தினத்தை உலக மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு சமாதானத்துடன் எந்த விதமான ஏற்றத்தாழ்வுமின்றி எல்லாக்கிறிஸ்தவர்களும் ஆலயத்தில் ஒன்று கூடி திருப்பலியில் பங்குகொள்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனெனில் கிறிஸ்துவின் முன்னிலையில் நாம் அனைவரும் ஒரே மக்களே எனவே தான் அவரை உட்கொள்ளும் முன்னர் ஒருவருக்கொருவர் சமாதானத்தை பகிர்ந்து கொள்கின்றோம். "பகைவரை நேச" என ஏன் கூறுகிறார்? கிறிஸ்துவின் மக்களிடத்தில் எவ்விதமான போட்டி பொறாமைகளோ சண்டை சச்சரவுகளோ குரோதங்களோ விரோதங்களோ இருத்தலாகாது அப்போதுதான் சமாதானத்தின் தேவன் எம்மத்தியில் வாசம் செய்வார். மேலும் கிறிஸ்து கூறுகிறார் "நான் உங்களில் அன்பு கூர்ந்தது போல நீங்களும் ஒருவர் ஒருவரிடம் அன்பு கூறவேண்டும் என்பதே எனது கட்டளை" (அரு-15:12)

எனவே சமாதானத்தின் தூதுவரான கிறிஸ்து எவ்வாறு எம்மில் அன்பு கூர்ந்து எமது மீட்புக்காக சிலுவை மரணத்தை ஏற்கத்தயாரானார். அவ்வாறே எம்மையும் ஒன்றுபட்டு வாழும் படியும் உண்மையான அன்பின் பிரதிபலிப்பு ஒற்றுமையின் பயனாகவே சமாதானத்தை நிலை நிறுத்த முடியுமென்பதை தம் வாழ்க்கை பயணத்தின் மூலம் எமக்கு எடுத்துக்காட்டியுள்ளார். எனவே தான் அவர் கடைசியில் சிலுவையில் மரிக்கும் தறுவாயில் கூட "தந்தையே இவர்கள் அறியாமல் செய்கிறார்கள் இவர்களை மன்னியுங்கள்" என்று அவர்களின் அறியாமையை அகற்றும் தேவனானார்.

*"உலகில் உங்களுக்கு வேதனை உண்டு*
*ஆயினும் தைரியமாய் இருங்கள்*
*நான் உலகை வென்று விட்டேன்.*
*என்னில் நீங்கள் சமாதானத்தை கண்டடையும் படி*
*இதையெல்லாம் நான் உங்களுக்கு சொன்னேன"* (அரு-16:33)

இவ்வாறாக கிறிஸ்து தம் சீடர்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தை கொடுக்கின்றார். ஏனெனில் உலகில் பாவப்பிளவுகளும் பொறாமைகளும் பிரிவினைகளும் போராட்டங்களும் நிறைந்த ஓர் துன்பக்கேணியாக இருக்கிறது. இவ்வாறான உலகில் வாழும் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் உண்மை அன்பின் மூலம் விசுவாசத்துடன் அவர் காட்டிய கரடுமுரடான வழிகளில் சென்று அவ்வாறு செல்லும் போது ஏற்படும் அனைத்து துன்பங்களுயும் துயரங்களையும் சகித்து வாழும் போது கிறிஸ்துவின் நிலையான சமாதானத்தை கண்டடைய முடியும் அப்போதுதான் வாழ்வில் வரும் எல்லா சவால்களையும் எதிர் கொண்டு வெற்றியின் வழியில் கிறிஸ்துவுடன் ஒன்றிணையலாம் என்பதையே சமாதானத்தின் தூதுவர் புலப்படுத்துகின்றார். மேலும் கிறிஸ்து தமது சீடர்களை பணிக்காக அனுப்பும் வேளையில்

*"நீங்கள் எந்த வீட்டிற்கு சென்றாலும் முதலில் இவ்வீட்டிற்கு சமாதானம்*
*என வாழ்த்துங்கள் சமாதானத்திற்குரியவன் அங்கு இருந்தால் உங்களின் சமாதானம்*
*அவனிடம் தங்கும் இல்லையேல் உங்களிடம் திரும்பி விடும"*.

(லூக்-10:5-7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே சமாதானத்தின் தூதரான கிறிஸ்து செல்லும் இடங்களெல்லாம் மக்களுக்கு அறிவிக்கும் பொருட்டு கூறுகின்றார். ஏனெனில் உலக மக்களுக்கு அன்றும் இன்றும் தேவைப்படுவது அன்பின் மூலமான சமாதானமே. எனவே தான் மற்றுமொரு சந்தர்ப்பத்தில் இவ்வாறாக கூறுகின்றார். "சமாதானத்தை உங்களுக்கு அளிக்கிறேன் நான் உங்களுக்கு தரும் சமாதானம் உலகம் தரும் சமாதானம் போல் அன்று" ஏனெனில் சமாதனத்தின் தூதுவராக பிறந்த கிறிஸ்து பரலோகம் செல்லும் போது எம்மிடம் விட்டுச்சென்றது சமாதானத்தின் சின்னமாகும். ஏனெனில் அச்சமாதானத்தின் வழியிலே எம்மையும் பரலோகம் சேர்க்க அவர் முற்பட்டார். மேலும் கிறிஸ்து உலகில் வாழ்ந்த காலத்தில் தம்முடைய சொல், சிந்தனை, நடத்தைகள் ஒவ்வொன்றின் மூலமாகவும் சமாதானத்தை வெளிப்படுத்தினார். எங்கு நோயோ பசியோ பசாசின் கட்டுகளோ பில்லிசூனியங்களோ மரணமோ மனக்கவலைகளோ அவ்விடங்களிளெல்லாம் சமாதானத்தின் தூதரான கிறிஸ்து சென்று விசுவசித்தவர்களுக்கு குணமளித்தும் மேலும் அவர்களின் விசுவாசத்தின் வளர்ச்சிக்காக செபித்தும் வந்தார்.

*"பரிசுத்த தந்தாய் நாம் ஒன்றாய் இருப்பதுபோல*
*நீர் என்னிடம் ஒப்படைத்தவர்களும் ஒன்றாய் இருக்கும் படி உமது*
*பெயரால் அவர்களை காத்தருளும"*

என கிறிஸ்து தமது சீடர்களின் ஒற்றுமைக்காக தந்தையிடம் வேண்டினார.

*"தேவ ஆவியளிக்கும் ஒருமைப்பாட்டை சமாதானம் என்னும்*
*பிணைப்பால் காப்பாற்ற கண்ணும் கருத்துமாய் இருங்கள"*

எனவே உலகிற்கு சமாதானத்தை அளிக்க வந்த சமாதானத்தின் தூதுவர் கிறிஸ்துவே, தொடக்கமும் முடிவுமாக இருந்து உலகின் முடிவு பரியந்தம் சமாதானம் என்னும் அற்புத வல்லமையின் மூலம் தமக்குள் எல்லோரையும் ஒன்று படுத்தி ஒரு மனப்பட்டு வாழவும் உன்னத மகிமைக்கு அழைத்து செல்லும் வெற்றியின் வீரனாகவும் திகழ்பவர் சமாதானத்தின் தூதுவரான கிறிஸ்துவே.

உங்களுக்கு சமாதானம்

செல்வி. பொ. சுசிலா
தமிழ்ப்பிரிவு
விடுகையாண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் யுத்தமும் வேதாகம விளக்கமும் – (ஒரு கண்ணோட்டம்)

அகில உலகும் போர் நிகழும் (லூக் 21:9) சமுதாயம் பெரிதும் பிளவுபடும் (லூக் 21:10) துன்புறுத்தல்கள் பெருமளவு இடம் பெறும் (லூக் 21:10-12) குடும்பத்திலே பிளவுகளும் காட்டிக்கொடுத்தலும் இடம்பெறும் (லூக்-21:16) பிரமாணிக்கமுள்ளோர் கொல்லப்படுவர் (லூக் 21:17) ஏக்கமும் அச்சமும் இடம் பெறும் (லூக்11:26)

இவையாவும் பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டது. போன்று இன்று எங்கும் கொடிய யுத்தத்தை காணக்கூடியதாக இருக்கின்றது. குடும்ப உறுப்பினர்கள் தொடக்கம் நாட்டுக்கு நாடு வரை யுத்தங்கள், பிரச்சனைகள், பிளவுகள், ஏன் இந்த யுத்தம்? பதவி ஆசை, இனக்குரோதம், சமய வாதம், பொருத்தப்பாடின்மை போன்ற காரணங்களே இவ்யுத்தத்தினை உண்டு பண்ணி மனித உயிர்களிலும் அவர்களின் வாழ்க்கையினும் சொத்துக்களிலும் விளையாட வைக்கின்றன.

இன்று இலங்கையை எடுத்துக்கொண்டால் பிரிவினைவாதம் ஆப்கானிஸ்த்தானில் அதிகார யுத்தம் காஸ்மீரில் பிரிவினை யுத்தம் பொஸ்னியாவில் வாழ்க்கைக்கான யுத்தம் ஈரான் அமெரிக்கா பலப்பரீட்சை என உலகமெங்கும் எண்ணற்ற அகதிகளை, அநாதைகளை, அங்கவீனர்களை, பொருட்சேதங்களை உண்டாக்குவதை காண்கின்றோம். ஏனிந்த யுத்தம்? எதற்காக இந்த யுத்தம்? எதனால் இந்த யுத்தம்? வேதாகமமானது யுத்தத்திற்கு என்ன காரணம் கூறுகின்றது என்பதை பார்ப்போம்.

நீர் என்னைப்பணிந்து கொண்டால் இவை யாவும் உம்முடையதாகும் (லூக் 4:7) பணியவைத்தலானது கிளர்ச்சி உருவாக காரணமாகிறது. என அடிமைத்தனத்தை மனிதன் வெறுக்கின்றான். எவரும் தனது சொந்த ஊரில் ஏற்கப்படுவதில்லை (லூக் 4:24) தனது சொந்த மண் இல்லாத நிலைமை இங்கு கூறப்படுகின்றது. சந்தர்ப்பங்கள் உரிமைகள் மறுக்கப்படுகின்றன. பிறருக்கு நன்மை செய்வதா தீமை செய்வதா? பிறர் உயிரைக் காப்பதா? அழிப்பதா? (லூக் 6:6-9) மனிதன் தனது உயிர்களை குறித்து சரியான மதிப்பீட்டை கொள்ளாதவனாக இருக்கும் போது அழிவுகள், தீமைகள் ஏற்படுகின்றன. இப்போது திருப்தி காண விரும்புகிறார்கள். சிரிப்பவர்களாக உள்ளனர். எல்லோரும் புகழ வேண்டுமென விரும்புகிறார்கள். (லூக் 6:25-26)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்கண்ணிலுள்ள விட்டத்தை கவணியாது உன் சகோதரன் கண்ணிலிருந்து துரும்பை பார்த்தேன். இன்றைய அமெரிக்க நிலைஇதுதான். தனது ஆயுதங்களை மேம்படுத்திக்கொண்டு ஆயுதஉற்பத்தியினை பெருக்கிக்கொண்டு மற்றநாடுகளினை கட்டுப்படுத்துகின்றது. இதனால் ஏற்படும் முரண்பாடு இன்றைய ஈராக் கெடுபிடிகளுக்கு காரணமாகின்றது. எதிராக இல்லாதவன் சார்பாக இருக்கின்றான் (லூக் 9:50)

சட்டங்களையும் சடங்குகளையும் தமது நலனுக்காக பயன்படுத்தி உண்மைக்கு சான்று பகன்றோரை கொன்றனர். (லூக் 11:47-51.) தற்பெருமையும் அகங்காரமும் கொண்டனர். புறச்சட்டங்களை மதிக்கின்றனர். தன்நலம் உள்ளவர்கள் உலக மகிமையையே விரும்புகின்றனர். பலர் எதிர்ப்புக்கோட்பாடுகளை முறியடிக்க முனைகின்றனர் தன்னலம், ஆசைகள், எதிர்ப்பு என்பன ஒரு யுத்ததிற்கு அடிப்படையாகின்றது. ஒரு சில சலுகைகளுக்காக தன் இனத்தையே அடிமைத்தன அவமான நிலைக்கு இட்டு செல்வதின் ஊடாக ஒரு யுத்த சூழ்நிலையை உருவாக்கும். எந்த அதிகாரத்தினால் இப்படி செய்கின்றீர்கள். (லூக் 20:12) ஒருவனுடைய பொறுமை அவன் இழிவாக நினைக்கப்படும்போதும் ஒதுக்கப்படும்போதும் யுத்தத்தினை வழிநடத்துபனே அவன் தான்.

பரிசுத்த வேதாகமத்தை நோக்கும்போது ஒருவன் அல்லது ஒரு சமூகம் ஒரு நாடு கிளர்ந்தெழ அவனது சுதந்திரம், உரிமை, சிந்தனை யாவுமே கட்டுப்படுத்தப்பட அல்லது முற்றும் முழுதும் இல்லாதொழிக்கப்படுவதாலேயே ஏற்படுவதை காணமுடிகின்றது.

யுத்தம் எவ்வாறு ஏற்பட்டது? ஆதியிலே சாத்தானுக்கும் கடவுளுக்குமிடையே ஆதாம்-ஏவாள் ஊடாக ஆரம்பித்த யுத்தம் (ஆதி 3:1-6) தொடந்து காய்யீன் ஆபேலை கொலை செய்ததன் மூலம் தொடர்ந்து (ஆதி 4:1-8) தொடர்ந்து ஏசா, யாகோபு உரிமையுத்தத்தினூடே (ஆதி 27:41-46) வளர்கின்றது. சூசை தனது சகோதரரால் வெறுக்கப்பட சகோர பிளவு (ஆதி 37:1-24) இஸ்ராயேலர்-மன்னன் பார்வோனுக்குமிடையே மோயிசனூடே விடுதலைப்பயணத்தினூடே காணப்படுகின்றது. (யாத் 1:14) இது தாவீது கோலியாத்தை கொல்லும் கௌரவப் போரிலும் (1சாமு 17:48-50) தொடர்ந்து பத்து கோத்திரங்களாக பிரிவினைக்கு (1அரசர்12) உள்ளாவதும் யுத்தங்களின் ஆரம்ப நிலைகள். போரே இல்லாத உலகமில்லை. எங்கும் போர், எங்கும் அமைதியின்மை. ஏன் இந்த கோரம் இவ்வாறு சென்றால் இதன் விளைவு எவ்வளவு கொடியது? இதற்கான தீர்வு என்ன? சம்மந்தப்பட்ட ஒவ்வொருவரினதும் மாற்றம் சமநிலை அடையும் யுத்தத்திற்கு முடிவு கட்டுமா?

எனவே மனந் திரும்பி புண்ணியத்தில் வளர வேண்டும். புறவினத்தாருக்கு பணிபுரிய வேண்டும். அவன் தன்னை மறந்து கிறிஸ்துவின் பணி செல்லவேண்டும் தீய விருப்பங்கள் நாட்டங்கள் என்பவற்றுக்கு அடிமைப்படாது வாழவேண்டும். நன்மையை கடைபிடிக்க சிரத்தை






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யவேண்டும் உளமாற்றம் பெறுகின்றவன் தாழ்ச்சி உள்ளவனாகின்றான் தனது பணியை அறிகின்றான். அவனுக்கு தெளிவு ஏற்படுகின்றது. ஆண்டவர் உங்களை மன்னிப்பது போல நீங்களும் மன்னியுங்கள் என எமது மாற்றம், எமது தாழ்மை, ஒன்றிப்பு, பணிவு, சேவை, உயிர்களை மதித்தல், பிற மதங்களை, பிற இனத்தவரை மதித்தல் அன்பு, இரக்கம், பரிவு போன்ற பண்புகளை உருவாக்கக்கூடியதாக அமைய வேண்டும்.

ஆம் உண்மையில் நான் வாழத்தான் பிறந்தேன். நான் மட்டுமா? என் அயலானும் வாழ வேண்டும். உனக்காக அழாதே உன் சகோதரனை நினை அவனுக்காகவும் அழுவாய் இரங்கிய உள்ளமும் பரிவும் தாழ்ச்சியும், சாந்தமும், பொறுமையும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும் அவசியம் யுத்தங்களை யுத்தங்களால் முறியடிக்க எண்ணுவது சிறப்பானதல்ல. நீங்கள் உங்களுக்கு மட்டும் அழிவை தேடவில்லை உன் பிள்ளையையும் அழவைக்க முனைகிறாய். ஆம் யுத்தத்தின் விளைவு பசி, பட்டினி, மரணம், அமைதியின்மை என்பனவாகும்.

ஆகவே வேதாகமத்தினூடே யுத்தமென்பது ஒரு தனிமனிதனின் மனபாங்கினூடே சமூகத்திற்கும் தேசங்களுக்கும் பரவுவதொன்றாவதால் முழுமையான அர்ப்பணிப்பினூடே அமைதியான ஒரு சூழலை உருவாக்கலாம். என்பதை இறைமகன் இயேசு தனது சொல்லாலும் செயலாலும் எடுத்தியம்புகிறார். “நானே வழியும் ஒளியும் ஜீவனும்” ஆம் தீர்வு முதலில் என்னிடத்திலிருந்து எழ வேண்டும்.

ஜட். என்டனி
ஆரம்பப்ரிவு
விடுகையாண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய சமுதாயத்தை உருவாக்க இன்றைய திருச்சபையின் பங்கு.

இன்றைய உலகிலே வல்லரசு நாடுகள் போட்டியுடன் ஆயுத உற்பத்தி செய்து கொண்டிருக்க பூமி தன்னை சுழற்றிக் கொண்டு, சூரியனை வலம் வந்துக்கொண்டிருக்க இந்த இயக்கத்தில் மனிதன் உட்புகும்போது ஒரு வரலாறு ஆரம்பமாகின்றது. தனக்கும் உலகிற்கும் இடையில் உள்ள தொடர்பை தனது வாழ்க்கையின் பொருளை காண முயல்கின்றான். இப்படியாக வாழ்க்கைக்கு பொருள் கண்டு அர்த்தம் கொடுக்கும் மனிதன் சமூகமாகவே வாழ முற்படவேண்டும் மனிதன் தனது ஆற்றலின் அளவிற்கேற்ப சமூக, பொருளாதார, அரசியல் அமைப்புகளை உருவாக்கியதால்தான் அவை வளர்ந்தன. சில சரிந்தன. இதுதான் உண்மை இந்த மனிதனுடைய வாழ்வு சிறப்படைய இந்த அமைப்புகளில் மாற்றம் தேவைப்பட்டது. உடல், பலம், அறிவு, திறன் ஆகியவற்றை பயன்படுத்தி உற்பத்தியை பெருக்கிக்கொண்ட மனிதனை பொருளாதார அமைப்பு உயர்ந்தவன், தாழ்ந்தவன் என பாகுபடுத்தியது. ஆகவே இந்த சமுதாய அமைப்பை மாற்றி யமைக்க மனிதர்கள் மனம் திருந்தினால் மட்டும் போதாது. மாற்றம் ஆணிவேரை அடைய வேண்டும். அடிப்படையை மாற்றி அமைக்கவேண்டும். இன்றைய சமூக அமைப்புகள் எல்லோருடைய பொது நன்மைக்காகவும் எல்லோரும் பங்கெடுக்க உருவானவையல்ல. மாறாக ஒரு சிலரின் நன்மைகளுக்காக சலுகைகளுக்காக பலர் மீது திணிக்கப்பட்ட அமைப்பாக காணப்படுகின்றது. ஆகவே இது மாற வேண்டும் மாற்றப்பட வேண்டும். மனித சமுதாயம் யாருக்கும் எதற்க்கும் அடிமையாக கூடாது.

இந்த புதிய சமுதாயம் விடிவதிலே திருச்சபைக்கு பங்கு உள்ளதா? திருச்சபையின் பங்குதான் என்ன? பங்கு உன்டென்றால் அதன் பணிதான் என்ன? திருச்சபைக்கும் சமுதாயத்திற்கும் தொடர்பு இருக்கின்றதா? அத்தொடர்பு நடைமுறையில் எப்படி வெளிப்படுத்தப்படுகின்றது. வறியவர்களுக்கும் எளியவர்களுக்கும் தொண்டு செய்யும் திருச்சபை அவர்களோடு ஒன்று பட வேண்டும். ஏழைகளோடு ஏழைத்திருச்சபையாக மாறவேண்டும். இறைவன் தனது அன்பு மக்களை எல்லா அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்க வருவதை காட்டும் போது அவர்களது இழிவு நிலையையும் அது மாறுவதற்கான வகைகளும் பற்றி விழிப்படையவும் உதவ வேண்டும். ஒடுக்கப்பட்ட அடக்குமுறைக்குட்படுத்தப் பட்டவர்கள். பக்கம் நின்று கைகொடுக்க வேண்டும். அதிகார வர்க்கத்தின் அடக்குமுறையை எடுத்தியம்புவது திருச்சபையாகத்தான் இருக்கவேண்டும். சமரசம்பேச பின்வாங்காமல் விசுவாசத்தோடு சிலுவையிலே திருச்சபை தன்னை அர்ப்பணிக்கவேண்டும். அப்போதுதான் திருச்சபைக்கும் உலகிற்கும் விமோசனம் உண்டு. போதிப்பது மட்டும் திருச்சபைக்கு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கிய பங்கென்று கொள்ளமல் உரையாடவும் வேண்டும். திருச்சபையிலே சமுதாயம் பற்றிய கண்ணோட்டம் வளர வேண்டுமானால் பொது நிலையினர் பெரும்பாலும் ஈடுபட வேண்டும் எனவே ஆர்வமும் ஆற்றலும் நிறைந்த கிறிஸ்தவர்கள் இக்குழுக்கலோடு இணைந்து செயற்பட வேண்டும். அந்த அனுபவத்திலே குருக்களும் துறவிகளும் தங்களுடைய கிறிஸ்தவ சுதந்திரத்தை பயன்படுத்த தயக்கம் காட்டக்கூடாது. இந்த குழுக்களின் ஏக்கங்கள், கவலைகள், மகிழ்ச்சி அனைத்திலும் பங்கு கொள்ள வேண்டும். அந்த அனுபவத்திலே இறைவனை நம்புவது திருத்துவமென விசுவசிப்பது செப வாழ்வு பரித்தியாகம் இவற்றில் அர்த்தம் என்று தேடுவதில் அக்கறை காட்ட வேண்டும்.

இந்த குழுக்கலும் நிறுவன திருச்சபையும் எத்தனை சிக்கல்கள், தடைகள் இடையூறுகள் வந்தாலும் உரையாடலை நிறுத்திவிடாமல் தடைவிதிக்காமல் தமது முயற்சியை கைவிடாது நடைபோடுமானால் புது சமுதயா வளர்ச்சிக்கு வழி சமைக்கும் ஓர் திருருச்சபையாக திகமும் என்பதில் ஐயமில்லை. இதற்கான பதில் எமது கைகளிலே உண்டு. இதற்கான பதில் காலத்தின் கைகளில் மட்டுமல்ல இந்த மிலேனிய வருடத்தில் புதிய மாற்றம் புதிய மலர்ச்சி புதிய வழி பிறக்க நாம் ஒன்று பட்டு ஒற்றுமையாக நேர்மையோடு நீதியோடு செயற்பட்டால் புதிய சமுதாயம் உருவாக முடியும்.

அ.அமிர்தநாதன்
விவசாய பிரிவு
முதலாம் வருடம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவனும் குடும்பமும்.

ஆதியிலே வானத்தையும் பூமியையும் படைத்த தேவன் தம்முடைய அநாதி தீர்மானத்தின் படியே குடும்பம் என்ற மிகமிக முக்கியமான அமைப்பையும் உருவாக்கினார் எல்லா ஜீவராசிகளையும் படைத்த சர்வ வல்ல சிருஷ்டி கர்த்தாவாகிய தேவன் தன்னுடைய சாயலில் மனிதனை ஆணும் பெண்ணுமாக படைத்து குடும்பம் என்ற அமைப்பை தோற்று வித்தான். குடும்பம் என்ற அமைப்பை உருவாக்கினாரோ அந்நோக்கம் நிறைவு பெற்றதக்கதாக ஒவ்வொரு கிறிஸ்தவ குடும்பமும் பாடுபட வேண்டும்.

ஒரு குடும்பம் நித்திய சந்தோசத்தையும் சமாதானத்தையும் அனுபவிக்கவேண்டுமானால் அக்குடும்பத்தை கட்டியவரின் கட்டுப்பாட்டில் அது இருக்க வேண்டும். ஆண்டவருடைய வார்த்தையின் படியே அக்குடும்பத்து சகல காரியங்களும் நடைபெற வேண்டும். தேவவார்த்தையின் படியே கட்டப்படாத தேவ ஆலோசனையை கேளாத குடும்பங்களில்தான் கொடிய பாவங்கள் தாண்டவமாடுகின்றன. குடும்பமென்பது பலதனிமதனிதர்களை கொண்ட கூட்டமைப்பு இத் தனிமனிதர்கள் மெய்யான கிறிஸ்த்தவர்களாய் விளங்கும் போது மாத்திரமே ஒரு குடும்பமும் அதன் மூலமாக சமுதாயமும் செழிப்பாகவும் தேவசமாதானத்துடனும் இருக்க முடியும். தேவவார்த்தையை மையமாகவும் கிறிஸ்த்துவை கர்த்தராகவும் இரட்சகராகவும் தலைவராகவும் கொண்டு வாழும் குடும்பங்களில் காணப்படும் பரம சந்தோசத்தின் இரகசியமே இதுதான்.

கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் உதவியாயும் உறுதுணையாயும் இருந்தாலே குடும்ப வாழ்வு இனிமையாக இருக்கும் (மத்தியு ஹென்றி) "அன்பும் அரவணைப்பும் குறைவடையும் போது குடும்பத்தில் சந்தோசமும் குறைவடைந்து போகும" (ஸ்டீவன் ஒல்ஃபோட்) "திருமணத்தின் வெற்றி சரியான நபரை தெரிந்தெடுப்பதில் அல்ல மாறாக சரியான நபராக நாம் இருப்பதிலேயே தங்கியுள்ளது" (தோமஸ் வொட்சன்)


கணவனை இல்லத்தலைவனாகவும் மனைவியை இல்லத் தலைவியாகவும் கொண்டு ஒரு கிறிஸ்தவ குடும்பம் திகழ வேண்டும். மனைவி கணவனுக்கு கீழ்ப்படிபவளாக கணவன் மனைவியை நேசிப்பவனாக பெற்றோர்கள் பிள்ளைகளிற்கு கோபமூட்டாதிருப்பவர்களாக பிள்ளைகள் பெற்றோருக்கு கர்த்தருக்குள் எக்காரியத்திற்கும் கீழ்ப்படிவுள்ளவர்களாக விளங்குவதே ஒரு கிறிஸ்தவ குடும்பமாகும். ஒரு தேவ குடும்பத்தில் தன்மையை அக்குடும்மத்தில் உள்ளவர்கள் தேவனுடைய வார்த்தைதக்கு எவ்வளவு முக்கியம் கொடுக்கிறார்கள் என்பதிலிருந்து அறிந்துக்கொள்ளலாம். ஒரு கிறிஸ்தவ குடும்பமானது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவ மகிமைக்கென்று தேவ இராட்சியம் கட்டப்படத்தக்கதாக வாழ வேண்டும். தேவன் குடும்பத்தின் தலைவனாக திகழவேண்டும். ஒரு கிறிஸ்த்தவனுடைய, கிறிஸ்தவளுடைய சாட்சி அவள் வீட்டிலிருந்நதுதான் அரம்பமாகின்றது. உலகிலேயே நாங்கள் சாட்சியாகவும் தேவ மகிமைக்காகவும் வாழ மிகவும் கடினமான இடம் நம்முடைய குடும்பமே ஆகும். ஆனால் இங்குதான் நாம் மெய்யான கிறிஸ்தவ வாழ்வு வாழ தேவனாலே அழைக்கப்பட்டிருக்கின்றோம் என்பதை நாம் ஒரு போதும் மறக்கக்கூடாது.

"பக்தியுள்ள மனைவி கர்த்தர் அருளும் ஈவு" என தேவனுடைய வார்த்தை கூறுகின்றது. தேவன் எந்த நோக்கத்திற்காக உங்களை அந்த குடும்பத்தில் வைத்தாரோ அந்த நோக்கம் நிறைவேற நீங்கள் வாழ வேண்டும். ஒரு குடும்பத்தில் ஒரு கிறிஸ்த்தவனுக்கு சாட்சியில்லை என்றால் வேறு எங்குமே அவனுக்கு சாட்சி இருக்க முடியாது. உங்கள் குடும்பத்தில் நீங்கள் எப்படி இருக்கின்றீர்கள்? இதை வாசிக்கும் நீங்கள் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளாவிடின் இன்றே அவரை ஏற்றுக் கொண்டு நித்திய ஜீவனைப் பெற்று நித்திய மகிழ்ச்சியை இவ்வுலகில் உங்கள் குடும்பத்தில் அனுபவியுங்கள்.

எம்.ஜெ.ராஜினி
ஆரம்பப்பிரிவு
விடுகையாண்டு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவன்

அ. - அன்பானவன் இறைவன்
ஆ. - ஆதரிப்பவன் இறைவன்
இ. - இரக்கமுள்ளவன் இறைவன்
ஈ. - ஈகையுள்ளவன் இறைவன்
உ. - உண்மையானவன் இறைவன்
ஊ - ஊற்றாய் அருள்பவன் இறைவன்
எ - எல்லாம் தருபவன் இறைவன்
ஏ - ஏழ்மையானவன் இறைவன்
ஐ - ஐக்கியமானவன் இறைவன்
ஒ - ஒழுக்கம் கற்பிப்பவன் இறைவன்
ஓ - ஓங்கி வளர்ந்தவன் இறைவன்
ஔ - ஔடதம் போன்றவன் இறைவன்

எம்.ஆர்.பிலிசியன் (ரோய்)
விவசாயப்பிரவு
முதலாம் வருடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையாம் எம் மாசற்ற கன்னித்தாய் மரியாள்.

"உனக்கும் பெண்ணுக்கும் உன் வித்திற்கும் அவள் வித்திற்கும் இடையே பகையை உண்டாக்குவோம். அவள் உன் தலையை நசுக்குவாள்"

ஆம் அருமையானவர்களே, ஆதி ஆகமம் தன் 3ம் அதிகாரம் 15ம் வசனத்தில் கூறும் பெண்ணே மரியாளாவாள். தீமையினையும் தீமையின் வித்துக்களையும் அழிக்கும் பொருட்டு எம்மீட்பராம் கிறிஸ்துவை உடலில் சுமந்தவளே இவ்வன்னை மரியாள்.

சுவக்கீன் என்பவருக்கும் அன்னம்மாள் என்பவளுக்கும் மகளாய் வந்துதித்த மரியாள் தனது பெயருக்கு ஏற்ற விதத்தில் சாந்தமாகவும் பிறக்கும்போதே மாசற்றவளாகவும் பிறந்தாள். இறைவனை பெறப்போகின்றவள் என்பதற்காக இறைவனே அவளை ஆதிப்பெற்றோரின் சென்ம பாவ கறையில்லாமல் உத்தமியாக பெற்றெடுக்க வைத்தார். எனவேதான் "மலடி" எனப்பட்ட அன்னம்மாள் மரியாளை ஈன்றெடுத்தாள்

மரியாளின் பிறப்பை நினைவுகூறும் விதத்தில் திருச்சபையானது மார்கழி மாதம் எட்டாம் நாள் "மரியாளின் அமல உற்பவம்" என சிறப்பாக நினைவு கூறுகின்றது.

கன்னியாக, கபடமற்றவளாக வாழ்ந்து வந்த மரியாள் "கன்னிகருத்தாங்கி ஒரு மகனை பெற்றெடுப்பாள" எனும் இசையாசின் தீர்க்க தரிசன வார்த்தையை நிறைவேற்றக் கருதியே சூசை என்பருக்கு மணஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தும் இறைவனின் தூண்டுதலுக்கிணங்கி தன்னையே முற்றும் அர்ப்பணித்தவளாக இறைமகன் கிறிஸ்துவை கருத்தரித்தாள். கருத்தரித்தவள் கன்னியாக எவ்வாறு இருப்பாள்? என பலரும் நினைப்பதுண்டு கன்னிமை என்பது உடலுறவை தவிர்த்து ஆன்மீக வாழ்விற்கு முதலிடம் கொடுத்து இறைவனின் வார்த்தைக்கு இணங்குவதாகும். மரியாள் இந்த வகையைச் சேர்ந்தவராதலாள் கன்னித்தாய் எனப்பட்டாள். உடலளவில் கிறிஸ்துவுக்கு தாயாக விளங்கினாலும் இறைவனின் அருள் எங்கெல்லாம் செயற்படுகிறதோ அதற்கும் தாயாக விளங்கினாள். அதனாலேயே மனுக்குலத்திற்கே தாயாக மரியாள் விளங்கினாள்

ஒவ்வொரு தாக்கத்திற்கும் எதிர் விளைவு இருப்பது போல் மரியாளின் இன்நற்செயல்களின் விளைவாக அவர் உடலோடும், ஆன்மாவோடும் விண்ணக மகிமைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டாள் இதனையே திருச்சபை ஆவணி மாதம் 15ம் நாளை மரியாளின் விண்ணேற்பு நாளாக கொண்டாடி மகிழ்கின்றது.

விண்ணகத்திற்கு சென்றவுடன் மரியாளின் சேவை நின்றுவிடவில்லை எமக்காகவும் எம்மீட்புக்காகவும் இறைவனிடம் பரிந்து பேசுகின்றாள். இறுதிக்காலத்தில் நடுவராக வரும் கிறிஸ்துவின் வருகையின் போது அவரில் விசுவாசம் கொள்ளும் அனைவரும் பெறவிருக்கும் விண்ணக மகிமைக்கு அன்னையின் விண்ணேற்பு சிறந்த முன்அடையாளமாக திகழ்கின்றது.

செ.யதீஸ்
தமிழ்ப்பிரிவு
முதலாம் வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புது வாழ்வு.. (சிறுகதை)

டாண்.... டாண்.... டாண்.... மாதாகோயில் மணியோசை பூசைக்கான அழைப்பை விடுக்கின்றது. சிதறிய சிதறாத உள்ளங்கள் யாவும் கோயிலை நாடிச்செல்கின்றனர்.

பிதா சுதன் பரிசுத்த ஆவியின் பெயராலே ஆமென். என்று சிலுவையடையாளமிட்டவாறு கண்ணீர் ததும்ப தன் இருகைகளையும் கூப்பியவாறு இயேசுவின் திருவுருவத்தையே நோக்கிய வண்ணம் இருந்தான் கேப்ரியல்.

"ஓ இயேவே ஏன் என்னை தனிமையாக்கி விட்டாய்? ஏன் என்னை கைவிட்டாய்? என் நம்பிக்கைகளை சிதறடிக்கச்செய்து விட்டாய்? என் பிள்ளையைக் கூட என்னால் உன்னிடம் அழைத்து வர முடியாத துர்ப்பாக்கியனாக்கிவிட்டாயே" புலம்பினான் கேப்பரியல் தன்னை மறந்தான்.

கேப்ரியல்-சுசித்ரா ஒருவரை ஒருவர் விரும்பி வீட்டாரின் எதிர்ப்புக்கு மத்தியில் திருமணம் செய்து ஆறுவருடங்களாகிவிட்டன. "கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும்" எனும் பைபில் வார்த்தைகளுக்கிணங்கி எதிர்ப்புகள் நீங்க ஏற்கனவே பதிவுத் திருமணம் செய்ததினால் திருச்சபை சட்டத்திற்கு இணங்க கைப்பிடித்தனர். எனினும் சுசித்ரா தனது மதத்தை விட்டு கிறிஸ்தவமாக மறுத்துவிட்டாள். எனவே திருச்சபை சட்டதிற்கிணங்க அவர்களின் முதற்குழந்தைக்கு ஞானஸ்ஞானம் வழங்கப்பட்டது. காலப்போக்கில் சுசித்ரா தனது மதக்கொள்கைகளையே தனது மகனுக்கு புகட்ட தொடங்கினாள். தனது மொழியினை மட்டும் புகட்டத் விரும்பலானாள் மகன் கோயிலுக்கு செல்வதையோ தான் செல்வதையோ வெறுத்தாள். கேப்ரியலின் பொருளாதார நிலைமை, வீட்டு சூழ்நிலை என்பன யாவும் இருவரிலும் விரிசலை ஏற்படுத்தியதன் விளைவே இன்று அவன் தனிமைப்பட்டு விட்டதன் காரணங்கள்.

"மகனே" அருட்தந்தை ஜோசப்பின் அன்பான குரலைக்கேட்டு "பாதர்" என்றவாறு எழும்பி அவசரமாய் தன் கண்களை துடைத்துக்கொண்டான்.

"என்ன கேப்ரியல் இப்படி நடந்து கொள்கின்றீர்? உம் நிலமை எனக்கு நன்றாய் புரிகின்றது. இயேசு உன்னை காப்பார் மகனே "நீ நடக்க வேண்டிய வழியிலே உன்னை நடத்துகின்ற உன் தேவனாகிய கர்த்தர் நானே" "என ஆண்டவனே கூறியுள்ளான். உமக்கு பாரிய பொறுப்புகள் உண்டு கேப்ரியல் நீர் ஓர் ஆசிரியன். ஒரு குடும்பஸ்தன் எத்தனையோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவன்களுக்கு உம்மால் எழுத்தறிவித்து அவர்களின் எதிர்காலத்தை ஒளிர்விக்க முடியும். உன் அர்ப்பனிப்பு, நம்பிக்கை உனது இழந்த வாழ்வை மீண்டும் பெற்றுத்தரும் கேப்ரியல் நீர் உமது வாழ்வை இறைவனின் வழி நடத்துதலில் நம்பிக்கை வைத்து ஆசிரியர் பணியில் நம்பிக்கைவை. அந்த கனிவான சேவையின் மூலம் கிடைக்கும் திருப்தி உமது தனிமையைப் போக்கும். கடவுளில் நம்பிக்கை கொள் உமது குடும்பவாழ்வும் சீராகும்" என்றார் அருட் தந்தை.

"இல்ல பாதர், என்னால எதனையும் நினைத்துப்பார்க்க முடியல. என்னை யாருமே புரிஞ்சிக்கிறாங்க இல்ல" என்றான் கேப்ரியல். "இல்ல மகனே கர்த்தர் அன்புள்ளவர் கடவுளால் இரு உள்ளங்களை இணைக்க மட்டுந்தான் முடியும். அவர் ஒரு நாளும் அதனை பிரிக்கமாட்டார் அன்பால் இந்த உலகத்தையே வெல்லலாம். கடவுளில் நம்பிக்கை வைத்து ஜெபம் செய். உன் மனைவி பிள்ளையிடம் அன்பைக்காட்டு. கற்பித்தலில் உன் மாணவரில் அன்பை பகிர்ந்துக் கொள் உனது தொழிலையும் குடும்ப வாழ்வையும் உன் இருகண்களாய் கொள்வாயாயின் நிச்சயம் நீ தனிமைப்பட மாட்டாய்" என ஒரு நீண்ட பிரசங்கமே செய்தார் அருட்தந்தை.

"ஆம் பாதர், என்நிலைமையினை நான் உணர்கின்றேன். மடத்தனமான எனதுநம்பிக்கை அற்ற அலட்சியப்போக்கால் தனிமைப்பட்டு விட்டதாக நினைத்தேன். எதிர் காலத்தில் நம்பிக்கை வைத்து நிகழ்கால நிகழ்வுகளை அன்பாக பொறுமையாக கடமை உணர்வோடு செய்தால் தனிமை வராது என்ன? பாதர் இயேசுவின் ஆசீர்வாதம் நல்ல மனமாற்றத்தினை உருவாக்கும்" என்று கூறிவிட்டு மாதாக்கோயில் படிகளில் இறங்கி நடக்கத்தொடங்கினான் கேப்ரியல்.

கேப்ரியல் செல்வதையே பார்த்துக்கொண்டிருக்கும் அருட் தந்தை ஜோசப் கேப்ரியல்-சுசித்ராவின் புதுவாழ்வுக்காக பிரார்திக்கலானார். "ஓ இயேசுவே இத்தம்பதியர் வேண்டிய வழியில் அவர்களை வழிநடத்தும்"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவ சபையின் சரித்திர முக்கயத்துவம் வாய்ந்த சம்பவங்கள்.

கி.பி.

51. ஜெருசலேம் திருச்சங்கம்.
64-67. இராயப்பர், சின்னப்பர் வேத சாட்சிகளாகியது.
70. ஜெருசலேமின் அழிவும் சபை சுதந்திரமாக இயங்க ஆரம்பித்தமையும்.
64-305 ரோம் சாம்பிராஜியத்தினுள் சபை துன்புறுத்தப்படுவது.
313. மிலான் சாசனம் அமுலாகியது.
496. குளோவிஸ் அரசன் கிறிஸ்தவ மதத்தை தழுவியது.
529. ஆசிர்வாதப்பர் மொன்டிக்கசினோ ஆச்சிரமத்தை நிறுவியமை.
1054. சபையில் மேல்நாட்டு, கீழ்நாட்டு பிரிவு தோன்றியமை.
1500. மெக்சிகோ, தென்அமெரிக்கா, இந்தியா, சீனா, யப்பான் ஆகிய நாடுகளுக்கு மறை போதகர்களின் வருகை.
1505. இலங்கைக்கு பிரான்சிஸ்கன் குருக்களின் வருகை. (மறை பரப்பு பனியின் ஆரம்பம்)
1517. மாட்டின் லூதருக்க எதிரான 95 குற்றச்சாட்டுகள் பகிரங்கப்படுத்தல்.
1521. மாட்டின் லூதர் ரோமை கிறிஸ்தவ சபைக்கு எதிரான சபையொன்றை ஆரம்பித்தல்.
1534. எட்டாவது ஹென்றி அரசன் இங்கிலாந்து சபையை ஆரம்பித்ததும். ரோமை ஆட்சியிலிருந்து விலகியதும்.
1535. தோமஸ் மூவர் அவர்கள் வேதசாட்சி கூறியது.
1543. மன்னாரில் ஏறக்குறைய 600 கத்தோலிக்கர் சமயத்துக்காக உயிரை பலி கொடுத்தனர். (வேத சாட்சிகளாக)
1556. கத்தோலிக்க மறைபரப்பு நூல் வெளியிடப்பட்டது.
1647. ஒல்லாந்தரின் புரட்டஸ்தாந்து மதத்தின் கிளைச்சபை இலங்கையில் ஆரம்பமாகியது.
1658. ஒல்லாந்து அரசு கத்தோலிக்க குருக்களை இலங்கையிலிருந்து வெளியேற்றியது.
1687. ஜோசப்வாஸ் அடிகள் இலங்கைக்கு வருதல்.
1697. மலைநாட்டில் ஜோசப்வாஸ் அடிகள் ஆற்றிய இரக்கப்பணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1705. கொண்சால் வேஸ் அடிகள் இலங்கைக்கு வருதல்
1711. ஜோசப்வாஸ் குருக்களின் மறைவு.
1742. காலிநகரை தலைமைப்பீடமாக கொண்டு பிரஸ்பரேரியன் கிளைச்சபையை இலங்கையில் ஆரம்பித்தல்.
1796. இலங்கையில் ஒல்லாந்தருக்கு சொந்தமான பிரதேசங்களை பிரித்தானியர் கைப்பற்றியது.
1803. இங்கிலாந்து சபையின் மறைத்தூதுவர்கள் இலங்கைக்கு வருதல்.
1812. இலங்கையில் பப்டிஸ் சபையின் கிளைச்சபை ஆரம்பித்தது.
1814. மெதடிஸ் சபையின் கிளைச்சபை ஆரம்பம்.
1854. அமலோற்பவ விசுவாச சத்தியம் ஒன்பதாவது பியூஸ் திருத்தந்தையால் பிரகடனப்படுத்தப்பட்டது.
1870. திருத்தந்தையின் அரசு கலைக்கப்பட்டது.
1883. இரட்சனிய சபையின் கிளைச்சபை இலங்கையில் ஆரம்பம்.
1891. கண்டியின் குருத்துவக் கல்லூரி திருத்தந்தை 13வது சியோவினது தலைமைத்துவத்தின் கீழ் ஆரம்பம்.
1924. இலங்கையில் புரட்டஸ்தாந்து சபை ஆரம்பம்.
1929. லத்திரன் உடன்படிக்கை.
1940. எட்மன்பீரிஸ் குருவானவர் முதலாவது சிங்கள ஆயராக அபிஷேகம் பண்ணப்பட்டது.
1945. இறைபணியான லக்தாஸ் டிமெல் இங்கிலாந்தின் முதலாவது ஆயராக அபிஷேகம் பண்ணப்பட்டது.
1947. தோமஸ் கூரே முதலாவது சிங்கள ஆயராக அபிஷேகம்.
1950. தேவதாயார் ஆன்ம உடலோடு விண்ணேற்றமடைந்தார் என்பதை திருத்தந்தை 12வது பியூஸ் விசுவாச சத்தியப்பிரகடனப்படுத்தினார்.
1958. 23வது அருளப்பர் திருத்தந்தையாக அபிஷேகம்.
1963. 6ம் சின்னப்பர் திருத்தந்தையாக அபிஷேகம்.
1965. தோமஸ்கூரே இலங்கையின் முதலாவது கருதினாலாக தெரிவு.
1978. முதலாவது அருளப்பர் சின்னப்பர் திருத்தந்தையாக அபிஷேகம்.
1978. இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் திருத்தந்தையாக அபிஷேகம்.
1995. இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் இலங்கைக்கு விஜயம்.
1995. பாப்பரசரால் ஜோசப்வாஸ் அடிகளாருக்கு முத்துப்பேறு பட்டம்வழங்கியமை (1995. ஜனவரி 21ம் திகதி).

ஏ.தவநாதன்
விவசாயப்பிரிவு
முதலாம் வருடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜூபிலியின் மீட்பு..

"உங்களுக்கு உள்ளவைகளை விற்று பிச்சைகொடுங்கள்" (லூக்12:33)

பழைய ஏற்பாட்டிலே இஸ்ரேயல் மக்கள் வாழ்வின் தங்களின் விடுதலைப்பயணதின். வெற்றியோடு எற்றத்தாழ்வுகளை மறந்து அன்பு காட்டி பகிர்ந்து. மன்னித்து 50ஆண்டுகளுக்கு ஒரு முறை இறைவனுக்கு ஒப்பு கொடுக்கப்படும் விழாவாக ஜூபிலிவிழா விளங்கியது. இன்று இரண்டாயிரம் ஆண்டுகளை கடந்தும் ஜூபிலி விழாவை என்ன அர்த்தத்துடன் கொண்டாடப்போகிறோம்? என்பதை சிந்திக்காமல் இருக்க முடியாது.

விஞ்ஞான யுகத்திலே மேலோங்கி நிற்கும் நாம் மனித மாண்புகளை மறந்து அன்பான அமைதியான வாழ்வை மறந்து யுத்த சூழ்நிலைகள் நிறைந்த யுகத்திலே மனிதனை மனிதன் விழுங்கும் நிலையில் ஆக்கிரமிப்புகள் நிறைந்த கொடூர உலகிலே வாழ்ந்து வருகிறோம். பாவசூழ்நிலை நிறைந்த உலகினை மீட்கவே இயேசு கிறிஸ்து இவ்வுலகில் உதித்து தன்னையே பலியாக்கி மரணத்தினை வெற்றி கொண்டு உய்வினை பெற்றுக்கொடுத்தார். ஆனால் அந்த உய்வு மண்ணோடு மண்ணாய் மடிந்து கிடக்கிறது இன்று.

மிலேனிய வருடம், ஜூபிலி ஆண்டு, புத்தாயிரமாம் ஆண்டு என்றெல்லாம் பறை சாற்றிக்கொண்டு இருக்கின்றோம். எங்கே அந்த உண்மையான மாண்புமிக்க ஜூபிலி புத்தாயிரம்? எங்கு பார்தாலும் வெடிகுண்டின் சத்தங்கள், செல்லடிகள், மரணவோலங்கள் இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடுகிறது. பெற்றோர் பிள்ளைகளை இழந்தும் பிள்ளைகள் பெற்றோரை இழந்தும் விரக்தியினால் ஆயுதம் ஏந்தும் நிலைக்கு தள்ளப்படுகின்றனர். புத்தாயிரத்திலே புது ஒளி வீசி பிரகாசிக்க வேண்டியவன் அன்பு, மனிதத்துவம், நீதி, நேர்மை, உண்மை, சமாதானம், அமைதி என்பவற்றை மறந்து எங்கும் எதிலும் சுயநலவாதியாக வாழ்கிறான்.

"கிறிஸ்துவுக்காக ஜீவிக்க வேண்டுமானால் சுயநலங்கள் மரிக்கவேண்டும்." "உலகத்தை மீட்டு இரட்சிக்கவே நான் வந்தேன்" என்று கிறிஸ்து கூறினார். எங்கு போனது அவர்விட்டுப்போன இரட்சிப்பு? விதவைக்கோலம் பூண்டு நிற்கும் பெண்கள் எத்தனை? சிறுபிள்ளைகளைக் கூட பாலியல் வல்லுறவுக்குட்படுத்தும் நிலை, விபச்சார விடுதிகள், பட்டுப்பூச்சிகள் போல சிறகடித்துப்பறக்கவேண்டிய சிறுவர்கள் இன்று கைக்கூலிக்கும் தம் வயிற்று பசியை போக்கவும் மூட்டை தூக்கும் அடிமைகளாக கூலிவேலை செய்கின்றார்கள். இந்த பாலகர்களுக்கு யார் பதில் சொல்வது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு"

என்ற வாக்கிற்கினங்க பிள்ளைகளைப்பெற்று அவர்களை அரும்பாடுபட்டு வளர்த்து நல்ல நிலைக்கு ஆளாக்கியவுடன் தங்களின் மேன்மையையும் கௌரவத்தையும் எண்ணி வயது முதிர்ந்த தங்கள் பெற்றோரை தமக்கு பாரமாக எண்ணி வீட்டை விட்டு வெளியேற்றுவதும் முதியோர் இல்லங்களில் சேர்த்து விடுவதுமான நிலை காணப்படும் போது எவ்வாறு அன்பையும் கருணையையும் எதிர்பார்க்க முடியும்?

கிறிஸ்து மீட்புக்காக அவதரித்து இரண்டாயிரம் ஆண்டுகள் ஆகியும் செய்யாத குற்றத்திற்காய் சந்தேகத்தின் பெயரில் சிறைவாசம் அனுபவிக்கும் இளைஞர், யுவதிகள் எத்தனை எத்தனை? ஏழைகளின் வயிற்றில் அடித்து சம்பாரிப்பதும் கொலை, கொள்ளை, கடத்தல் போன்ற செயல்கள் காணப்படும் இவ்வுலகில் எவ்வாறு கிறிஸ்துவின் ஜுபிலி ஆண்டுக்கான மீட்பை கொண்டாட முடியும்?

"பல நாடுகளை பயங்கரமாக பாதிக்கும் சர்வதேச கடன்களை நீக்கவும் ஏழை எளியவர்களின் கஷ்டதுன்பங்களை எடுத்துக்காட்டி கிறிஸ்தவர்களால் குரல் எழுப்பக்கூடிய அரிய சந்தர்ப்பமாக இந்த ஜுபிலி விழா அமைய வேண்டும்" என்ற பாப்பரசரின் கூற்றுக்கிணங்க மூவாயிரமாம் ஆண்டிலே இருக்கும் நாம் இருப்பதை இல்லாதவர்களுடன் பகிர்ந்தும் விட்டுக்கொடுத்தும் புரிந்துணர்வுடன் நம்மை நாம் இருக்கின்ற நிலையிலே எற்றுக்கொண்டு அமைதியும் அன்பும் கருணையும் நிறைந்த வாழ்வு வாழ்வோமாக.

"மெய்யான அன்பு பொய்யான எதையும் செய்யாது" எனவே எல்லாவற்றுக்கும் காரணம் அன்பு ஒன்றுதான். ஆண்டவரின் அருள்தரும் ஆண்டிலே ஆதித்திருச்சபையிலே முழுமையான அன்புடன் பகிர்ந்து. பங்கேற்று வாழ்ந்ததுபோல அன்பான வாழ்வை கடைப்பிடித்து ஜெபத்திலும் தவத்திலும் முழு விசுவாசத்துடன் ஒவ்வொருவரும் மனம் மாறுவோமேயானால் தமிழர், சிங்களவர், சாதி,மதம் என்ற பாகுபாடு இன்றி அனைவரும் ஒன்றாக கைகோர்த்து நீதி, நேர்மையுடன் கூடிய ஜுபிலியை கொண்டாடி பூரணமான ஜுபிலியின் மீட்பை பெற்றுக்கொள்ள முடியும்.

நம் அன்பு சொல்லிலும் பேச்சிலும் இராமல் செயலில் விளங்கும் உண்மையானதாய் இருக்கட்டும் (1 அருள் 3:19)

செல்வி.ஏ.ஜீலியட்மேரி
தமிழ்ப்பிரிவு
முதலாம் வருடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசை....

மேலை நாட்டில் பேராசை பிடித்த ஒருவன் இருந்தான். அவனுக்கு பெரிய கடையொன்றும் இருந்தது. அதில் அவனுக்கு சீரான வருமானம் கிடைத்தும் வந்தது. ஒரு நாள் தன்னுடைய ஏழைக்குடிசை தனவந்த பவனமாக மாறிடவேண்டும் என்பதுவே அவனது பேராசை ஒரு நாள் பக்கத்துவீட்டு கேப்ரியல் தோட்டத்தில் புதையலைக்கண்டு செல்வந்தானாக மாறியதை கேள்வியுற்றான். இவ்வாறு தனக்கும் கிடைக்க வேண்டுமென இறைவனை இடைவிடாது வேண்டினான்.

ஒரு நாள் இரவு தன் கடைக்கு அடியில் பொற் புதையல் கிடைப்பதாக கனவு கண்டான். இதை கடவுள் தனக்கு காட்டிய ஒரு அறிகுறி என நம்பிய அவன் தன் மனைவிடம் மட்டுமே இவ்விடயத்தை வெளியிட்டு யாரும் அறியாவேளையில் ஊர்உறங்கிய பின் கடையை இடித்து ஆழமாக தோண்டினான். ஓரிடத்தில் புதையல் போன்ற ஒன்று இருப்பதைக் கண்டு புதையல் உண்டு என முடிவு செய்தனர். வெளியே எடுத்தபின்னர் தான் கண்டனர் அது கடைக்கு வைத்த மூலைக்கல் என்பதை. பொற்குவியலுக்கு பதில் கடையின் மூலைக்கல்லே கிடைத்தது.

உலகமாகிய கட்டிடத்துக்கு முலைக்கல் இறைவனே. உலகை சுவர்க லோகமாக பொன்கொழிக்கும் இடமாக்க தேடுகின்றனர். இறைவன் இல்லையேல் அறம் அழியும் அறம் அழிய வாழ்கை அழியும். என்பதை பேராசைக்காரர் உணர்வதில்லை.

ஜோசபின் எட்னா
தமிழ்ப்பிரிவு
முதலாம் வருடம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவம் என்றும் மாறுவதில்லை..

மலர்கள் இணைந்தால் மாலையாகலாம்
அருவிகள் இணைந்தால் நதியாகலாம்
மரங்கள் இணைந்தால் தோப்பாகலாம்
முகில்கள் இணைந்தால் மழையாகலாம்

நற்குணங்கள் நம்மில் இணைந்தால்
நாம் மனிதனாகலாம்
நான்கு இனங்கள் இலங்கையில் இணைந்தால்
மனித மாண்பு மலரலாம்
வளர்பிறை வந்தாலும்
தேய்பிறை வந்தாலும்
வானம் அழுவதில்லை
சூரியன் உதித்தாலும் மறைந்தாலும்
பூமி தன் தடம் மாறுவதில்லை
அது போல் என்றும் எம் சபை திருச்சபை

உலக மாயங்கள் மாறலாம்
ஆனால் திருச்சபை மாறுவதில்லை
மனித மனங்கள் மதம் விட்டு
மதம் மாறலாம்-ஆனால்
கிறிஸ்தவம் மாறுவதில்லை-ஏனெனில்
கிறிஸ்துவின் விம்பம் கிறிஸ்தவன்-கிறிஸ்தவள்

அவன்(ள்) வாழ்வில் என்றும்
இல்லை மரணம்
மரணம் அவனுக்கு மாட்சி-ஏனெனில்
கிறிஸ்துவில் மீட்சி
இது எமது விசுவாசத்தின் உச்சி

எஸ். செபமாலை
விவசாயப்பிரிவு
முதலாம் வருடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசுவே நீ வரவேண்டும்...




மார்கழிப் பனியில்
மலர்கள் சிலிர்க்க
மண்ணுலகில் மனம் பரப்பி-மரியன்னையின்
மடியில் மண்ணவனாய் பிறந்தாய்

நாதமிடும் அருவியிலும்
நறுமண மலர்களிலும்
தீண்ட வரும் தென்றலிலும்-தேனியின்
ரீங்காரத்திலும் நீ உள்ளாய்

தாழ்ந்தோரை உயர்த்தவும்
பசித்தோரை நாவால் நிரப்பவும்
செல்வரை வெறுமையாகவும்-வெற்றி
வேந்தனாய் வெண்ணலையில் வலம் வந்தாய்

பொல்லாத யூதரும்
போர் சேவகரும்
பொங்கும் எரிமலையில்-பொன்னனை
உருக்கி புன்னகைத்தனர்.

நீ உயிர்த்து விட்டாய்
இன்னும் உலகம் உயிர்க்க வில்லை
உறக்கம் தெளியவில்லை-மது
அருந்திய உலகிற்கு மயக்கம் தீரவில்லை
மயக்கத்தை தீர்க்க-மரண சிறுக்கோடு
இயேசுவே நீ வரவேண்டும்

செ.சூசலி
ஆரம்பப்பிரிவு
விடுகையாண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனுஷகுமாரன்

கருணைக் கடலோனாய்
காக்கும் வல்லோனாய்
கரம்பிடித்து காத்திடும்
கர்த்தாதி கர்த்தரை

மனுக்குலத்தை மீட்டிடவே
மனுவேடம் பூண்டு வந்து
மனுமீது அவதரித்த
மன்னாதி மன்னரே



பாவியான என்னையும்
பாசமாய் தேடி வந்து
பாரினில் உயிரிழந்து
பரிவாக மீட்டீரே

நானே ஒளி என்றும்
நானே வழி என்றும்
நானே ஜீவன் என்றும்
நல்வழி காட்டினீரே

மெய்யான அன்போடு
மெய்யொளி பரப்பிடவே
மெஞ்ஞானம் தந்து
மெய்வாழ்வு வாழ்ந்தீரே

ஆவியின் கனியோடும்-உம்
அன்பான கற்பனையோடும்
அனுதினமும் தியானித்து
அனையாது சுடர்விடுவேன்

ஜே.எஸ்.ஜீ.பிலிப்
முதலாம் வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளி பிறந்தது.

மானிடம் மாண்டுக்கொள்ள
பாவங்கள் சேர்ந்துக்கொள்ள
பூமியின் எடை நீண்டு கொள்ள
பார்ப்பதற்கு பரிதாபமாக கிடக்கின்றது

படைத்தவன் பரிதாபம் கொண்டு
பரலோகத்திலிருந்து பரமன்
அனைத்தையும் அனைத்துக்கொள்ள
அனுப்பினார் அண்ணல்தனை

பரமன் வந்தபோது
பரிவில்லா பாவிகளும்
பரம்பொருளை பாவியாக்கி
கழுமரத்தில் கொளுவவைத்தனர்

பரமனின் பணியெங்கும்
பல்லாண்டு காலம் நிலைத்து
பல்லக்கில் பரவிடும்
பாரெங்கும் ஒலித்திடும்

சிலுவையை சிரித்துக்கொண்டு
சாவினை சகித்துக்கொண்டு
சாந்தியை அளித்துக்கொண்டு
சாத்தானை அழித்துக்கொண்டார்

ஒளியாக வழிகாட்டி
விழியினை விரித்துக்கொள்ள
விண்ணிலிருந்து மண்ணகம் மகிழ
இறைமகன் இயேசு ஒளியாக பிறக்கின்றான்

**எம். இக்னேசியஸ் குருஸ்**
**விவசாயப்பிரிவு**
**முதலாம் வருடம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதியின் வழியே சமாதானம்

ஆதிப்பெற்றோர் செய்த
ஜென்மக் கறை நீக்க
ஜெகத்தினில் உதித்த
ஜெயத்தின் நாயகனே

உமது வெற்றியின்
மகத்துவம் பாரச்சிலுவை
சிலுவையின் வழியால்
சிலாக்கியத்தை தந்தவனே

அவனியில் மனிதர் படும்
அவலங்களை போக்க
நீர் காட்டிய வழியன்றோ
அமைதியின் பாதை

அமைதியின் வழிச்செல்ல
அணுவளவேனும் ஆசையற்ற
அழிவுகளின் ஆதரவாளர்களே
அவனியின் மைந்தர்கள்

அழிவுகளைத் தேடித்தேடி
ஆயுதங்களை குவிக்குமிவர்
வெற்றியின் விளைச்சல்களே
அகதிகளும் அநாதைகளும்

ஆனாலும் நாள்தோறும்
ஆலயத்தில் கேட்பதுவே
சமாதானத்தின கூக்குரல்கள்
சமத்துவத்தின் நாயகனிடம்

உண்மையன்பு எங்குள்ளதோ
அங்கேதான் உத்தமனுள்
சமாதானம் குடிகொள்ளும்
என்றல்லவோ நீருரைத்தீர்

உள்ளத்தில் தூய்மையின்றி
வார்த்தையினில் உண்மையின்றி
ஆசைக்கு அடிமையாகி
அலைகின்ற மனித குலம்

ஆசைகளை அடக்கி
அன்பிற்கு கட்டுப்பட்டு
அராஜகரீகத்தினை கைவிட்டு
ஆக்கத்திற்கு வழிகோலி

உள்ளத்து தூய்மையுடன்
உற்றவன் உனைத்தேடி
வரும்போதன்றோ
அமைதியின் வழியினிலே
சமாதானத்தை கண்டடைவர்

செல்வி. பொ. சுசிலா
தமிழ்ப்பிரிவு
விடுகையாண்டு.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓடி வா தேவனே...

ஓ...தேவனே
எரிமலைகளுக்குள்ளே...
எங்களை புதைத்துவிட்டு
எங்கே சென்று விட்டாய்

பைபிலின் பத்து கட்டலைகளை
பக்தியுடன் பயின்ற-உன்
பாலகன் நானும்
பாவியாய் இங்கே

மாட்டுத் தொட்டிலில்
மார்புப் பால் குடித்து
மானிடம் காக்க உதித்த
மாதவம் செய்தோனே
நீ...
எங்கே சென்று விட்டாய்

அப்பமும் மீனும்
அள்ளிக்கொடுத்து
கிள்ளிய வயிற்றை
கிரக்கமின்றி
இரக்கம் காட்டியோனே
எங்கே சென்று விட்டாய்

சகோதரர்கள் என்று சொல்லியும்
சந்நியாசிகள் என்று சொல்லியும்
துரோகிகள் செய்யும் நிதம்
துரோகங்கள் கேளாயோ?

உலகம் முழுதும்-இன்று
உனது ஒளி பரவும்போது
ஏழைமக்கள்
ஏங்கித்தவிக்க
இன்னொரு இயேசு
இனியும் பிறப்பானோ?

வஞ்சகப் புகழ்ச்சி வாழும் நாளிது
நெஞ்சம் குமுறி
நேர்மை தேட-உன்
இரக்கம் முழுதும் இன்றே வேண்டும்

ஓ...தேவனே
அண்டமெல்லாம் குண்டுகளாய்
போர்ச்சிலுவையில் அறையப்பட்ட
இன்னும் உயிர்த்தெழாத மக்கள்
பசித்த வாய்க்கு
பாலூட்ட...மார்புத்தாய்கள்

விலா என்பற்ற
ஆண்களில் பிறப்பெடுக்கும் பெண்மை

நேற்றைய கொடுமைகளால்
நாளையை...
தொலைத்து விட்ட
இன்றைய
மக்களுக்காய்...எழுந்து வா...இயேசுவே

கல்வாரி மண்...குருதி பூண்டதுபோல்
முள்முடி...
உன் முகத்தை முத்தமிட்டது போல்
ஆணிச்சிலுவைகள் உன்னை
அரவணைத்தது போல்

என் தேவனே
எத்தனையோ முள்முடிகள்
எங்கள் முகங்களில்

எத்தனையோ கல்வாரி மலைகள்
எங்கள் ஊர்களில்

எத்தனையோ கல்லறை சிலுவைகள்
எங்கள் மனல்களில்

அத்தனையும்...
பூக்களாய் பூக்கவேண்டும்
புண்ணியமாய்
புகழ வேண்டும்

எல்லா மெழுகுவர்த்திகளும்
உன் வரவுக்காய்
ஏங்கியே...அழிந்துவிட்டன
இன்னும் என்ன...

ஓடி வா தேவனே!
ஓடி வா தேவனே!!

பொ.சேகரஸ் நாதன்
ஆரம்பப்பிரிவு
விடுகையாண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்தந்த சுகம்

முப்பத்தெட்டு வருடம் முது பெரும்
நோயாளி
எப்போது குணம் கிடைக்குமென
எண்ணியே காத்திருக்கும்
எத்தனையோ நோயாளரோடு
இருந்திட்டான் ஒரு மனிதன்

குணம் பெற விரும்புகிறாயா
குமாரன் விடுதலையாக்கினால்
மெய்யாகவே விடுதலையாவீர் என்று
விடுதலை நாயகர் வினாவினார்


ஒரு தலைமுறையாய்
ஒரு உதவியில்லாமலும்
ஊர்ந்திட முடியாமலும்
நிலைத்தே நீடித்த நாளாய்
படுத்திருக்கும் என்னை நீவீர்
இப்படிக் கேட்பது முறையாமோ


ஆண்டு பலவாகி
நீண்டு போனதன் காரணம்
வேண்டும் போது என்னை விட்டுவிட
குளத்தில் இல்லையே ஒரு நபர்
என் தொல்லை போக்கிடவே
என்னை தூக்கியே
கரை சேர்த்திடவே

என்றதை கேட்க
எம்பிரான் இயேசு
எழுந்திடு
உன் படுக்கையை எடுத்திடு
விரைந்து நடந்திடு
வீடு போய் சேர்ந்திடு

என்னே விந்தை
ஆண்டு பலவாகி
மீண்டும் வரா இளமை
வலிமையாவும் இழந்து
நீண்ட நோயுற்று
நீண்டு படுத்த மனிதன்
நிமிடத்தில் நலத்தோடு
கண்டவர் வியந்திட
நடந்திட்டான்
காட்சிப்பொருளானான்- தெய்வத்தின்
மாட்சிப்பொருளானான்

ஜே.டி.கெங்கேஸ்வரி
ஆரம்ப பிரிவு
விடுகையாண்டு







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிழ்ச்சியான குடும்பம்

ஒவ்வொரு சமூகத்திலும் குடும்பம் அடித்தளமாய் அமைந்திருக்கின்றது. ஒரு சமூகத்தின் பலம் அதன் குடும்பங்களைப் பொறுத்துள்ளது. கடவுள் தந்த சட்டங்கள் குடும்ப வாழ்க்கையில் பரிணமிக்க வேண்டும். கடவுள் ஆணைப்பற்றியும் பெண்ணைப்பற்றியும் என்ன கூறுகிறார் என்பது நமக்குத் தெரியவேண்டும். அப்பொழுதுதான் குடும்பங்கள் மகிழ்ச்சியானவையாய் இருக்க முடியும்.

இக்குடும்ப அமைப்பைப் பற்றி எத்தனையோ பேர் எவ்வளவோ எழுதியுள்ளனர். அதில் குறிப்பிடத்தக்கவர் பாரெல்லாம் போற்றக்கூடிய திருவள்ளுவர் ஆவார். இவர் தனது திருக்குறளெனும் நூலில் இல்லறவியல் எனும் அதிகாரத்தில் ஓர் குடும்பம் எவ்வாறு இருக்கவேண்டும் என்று தெட்டத்தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார். அது அனைவரும் அறிந்த விடயம் இப்போது மகிழ்ச்சியான குடும்பத்திற்கு தேவையானது எது என வேதம் கூறுவதை சிறிது அறிய முற்படுவோம்.

இறைவன் மனிதனை தமது சாயலாக ஆணும் பெண்ணுமாகப் படைத்தார். உலகின் அனைத்தையும் அவர்கள் ஆளக்கடவார்கள் என்றார். அந்த ஆணும் பெண்ணும் இணைந்த பின் உருவாவதே குடும்பம் எனப்படும். இக்குடும்பத்தில் "கணவன் தன் மனைவிக்கு செய்யவேண்டிய கடமைகளைச் செய்யட்டும் அவ்வாறே மனைவியும் தன் கணவனுக்கு செய்யட்டும்...."
(1 கொரி 7:2-3)

மனைவி கணவனை விட்டுப் பிரியலாகாது. பிரிந்தால் மறுமணம் ஆகாமலே இருக்கவேண்டும். அல்லது கணவனோடு ஒப்புரவாக வேண்டும். கணவனும் மனைவியைக் கைவிடலாகாது. (1 கொரி 7:10-11)

இவ்வாறு திருமணங்களைப் பற்றி எடுத்துக் கூறியிருக்கும் வேதாகமம் ஆணுக்கும் பெண்ணுக்கும் தனியான அறிவுரைகளை வழங்கியுள்ளார். "ஆணுக்குத் தலையாய் இருப்பவர் கிறிஸ்து பெண்ணுக்குத் தலையாய் இருப்பவன் ஆண்...." (1 கொரி 11:3-4)

அப்போஸ்தலரான சின்னப்பர் எபேசியருக்கு எழுதிய திருமுகத்தின் ஐந்தாம் அதிகாரத்தைப் பார்க்கும் போது அதில் கணவன் மனைவி எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என அழகாக எடுத்துக்கூறப்படுகின்றது. அதுமட்டுமன்றி, பிள்ளைகள் பெற்றோருக்கு எவ்வாறு கீழ்ப் படிந்திருக்கவேண்டும். எனவும் கூறப்படுகின்றது.

"உங்களுள் ஒவ்வொருவனும் தன்மீது அன்பு கூறுவதுபோலத் தன் மனைவியின் மீதும் அன்பு கூற வேண்டும். மனைவி கணவனிடம் அவனுக்குரிய மதிப்பை அறிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்து கொள்ள வேண்டும்" (எபேசியர் 5:3)

பிள்ளைகளே! ஆண்டவருக்குள் பெற்றோருக்குக் கீழ்ப்படியுங்கள் இதுவே முறை "தாய் தந்தையைப்போற்று" என்பதே வாக்குறுதியோடு கூடிய கட்டளைகளுள் முதலாவது. "அப்போது மண்ணுலகில் நீ நலம் பெறுவாய் நீடுழி வாழ்வாய் என்பது அவ்வாக்குறுதி.

"தந்தையரே உங்கள் பிள்ளைகளுக்கு சினமூட்டாதீர்கள். அவர்களை கட்டியத்து திருத்தி ஆண்டவருக்கேற்ற முறையில் அறிவு புகட்டி வளர்த்தல் வேண்டும்" (எபேசியர்6:40) குடும்பத்தில் பிரதானமானவர்கள் பெற்றோர் அதில் அதிக பொறுப்பைக்கொண்டவர் தாயாவார். தாயாளவள் எவ்வாறு இருக்கவேண்டுமென நீதிமொழிகள் எனும் பழைய ஏற்பாட்டு நூலில் எடுத்துக்கூறப்பட்டுள்ளது.

"நல்ல மனையாளைக் கண்டுபிடிப்பவன் யார்?
பவளத்திலும் அவள் அதிக அருமை.
அவள் புருஷன் மனம் அவளை நம்பும்
அவன் சம்பத்துக்கு குறைபடாது.
அவள் உயிரோடு இருக்கும் நாளெல்லாம்
அவனுக்கு நன்மையே செய்வாள் தீமை செய்வாள்"

அவள் ஒரு கடிமான உழைப்பாளி
வலிமையினால் தன்னை இடைகட்டிக்கொள்வாள்
தன் கைகளை பயன்படுத்துவாள்
தன் உழைப்பு சித்திபெறுமென்று அவளுக்குத் தெரியும்.
இரவில் அவள் விளக்கு அணையாது.
"ஏழைக்கு தன் கையைத்திறப்பாள்
எளியவர்க்குத் தன் கரத்தை நீட்டுவாள்.."
(நீதி மொழிகள் 31:10-30)

இதே போன்று கர்த்தருக்கு அஞ்சும் ஓர் குடும்பம் எவ்வாறு இருக்கவேண்டுமென சங்கீதப் புத்தகத்தில் எடுத்துக்கூறப்படுகின்றது. "ஆண்டவருக்கு அஞ்சி அவர் வழிகளில் நடக்கின்றவன் எவனோ அவன் நற்பேறு பெற்றவன். உன் உழைப்பால் நீ பெருவது உனக்குப் போதியதாய் இருக்கும்
நீ எல்லா நற்பேறும் நலமும்.... (சங்கீதம்)

இவ்வாறு நல்லதொரு குடும்பமாக வாழ இறை ஆசீர் வேண்டுவோம்.

**செல்வி. எஸ். வியானிரோஸ்**
**ஆரம்பப்பிரிவு**
**விடூைடயாண்டு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை...

"காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"

மானிடரின் உயர்விற்கு வழிகாட்டும் ஆசிரியரை ஆளுமையுடன் உருவாக்கும் மலையகத்தின் யதன்சைட் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் வருடந்தோறும் மலரும் சாரோனின் ரோஜா நூலானது பல பல ஆக்கங்களையும் கிறிஸ்தவம் தொடர்பான கருத்துக்களையும் கொண்டுள்ளது. மலையகத்தின் உயர்கல்விக்காய் வித்திட்ட எமது கலாசாலை கிறிஸ்தவ ஒன்றியத்தினூடாக இந்நூலை வெளியிடுவதற்கு சிரந்தாழ்ந்த நன்றியை கலாசாலைக்கு நவில்கின்றோம்.

ஆசியுரை வழங்கிய அருட்தந்தை எட்வின் பர்ணாந்து அடிகளாருக்கும் விசேட விருந்தினர்களாக வருகை தந்திருந்த அனைவருக்கும் இதய பூர்வமான நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்நூல் வெளிவர ஆக்கமும் ஊக்கமும் அளித்து ஒத்துழைப்பு நல்கிய கலாசாலையின் முதல்வர், உப முதல்வர் விரிவுரையாளர்கள் அனைவருக்கும் நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றோம்.

தனது அயராதஉழைப்பினால் ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கிய பொறுப்பு விரிவுரையாளர்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும் ஆக்கங்களை தந்துதவிய எமது ஆசிரிய மாணவர் அன்புள்ளங்களுக்கும் விளம்பரங்களை தந்துதவிய பிரமுகர்கள் அனைவருக்கும் இம்மலரினை வடிவமைத்து தந்த பதிப்பகத்தாருக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளளோம்.

அத்துடன் இந்நூலை வெளியிடுவதற்கு அயராது உழைத்த ஒன்றியத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர். இதழாசிரியர், உப தலைவர், உப செயலாளர். உறுப்பினர்கள் அனைவருக்கும் எமது நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றோம்.


எங்கள் இதயத் தாமரையில் மலர்ந்த நன்றியினை உங்கள் அனைவரது கரங்களிலும் சமர்ப்பிக்கின்றோம். கரங்களிலும் உள்ளங்களிலும் இந்நன்றியினை ஏற்றுக்கொள்வீர்.

**நன்றிகள்**
**கிறிஸ்தவ ஒன்றியம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**என் கண்ணை வைத்து,**
**உனக்கு ஆலோசனை சொல்லுவேன்.**

கிறிஸ்தவ ஒன்றியம்


**VIVI**
*Print Plus*
No.69/5, Dumburugiriya,
Dunbar Rd,
Hatton.



தனு பிரிண்ட்
பெமினாஸ் கொமினிகேசன்
ஹட்கொப் கட்டிடம்.
ஹட்டன்.
Tel :051-22178



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



Printed by : Thanu Printers